திருக்கண்ணோக்கம்


(ஸ்ரீ ரமண சந்நிதி முறை)



விளக்கவுரை

முகவைக் கண்ண முருகனடிமை

சமர்ப்பணம்



ஸ்ரீ முகவைக் கண்ண முருகனார்

கண்ணாகத் தன்அருளே காட்டினான் தன்னடியேற்கு
அண்ணா மலைரமணன் அழகார்ந்த பொன்மேனி
எண்ணாலே எண்ணி எழுத்தால் எழுதவொணாக்
கண்ணார் அமுதனொடு கண்ணோக்கம் ஆடாமோ.

- திருக்கண்ணோக்கம், ஸ்ரீ ரமண சந்நிதிமுறை 1638

ஓம் நமோ பகவதே ஸ்ரீரமணாய

திருக்கண்ணேக்கம்

(ஸ்ரீ ரமண சந்நிதிமுறை)

இலேபறிக் கெனவனத் தெனேக் கொடுபோகி
உலேவறக் கண்ணேக்கு உவகையின் உதவியும்
உகண்டஎன் உயிர்உணர்வு ஒடுக்கிநள் யாமத்து
அகண்ட சிவாநுபவ வாலறிவு அளித்தும்

-கீர்த்தித் திருவகவல், 225-228
(ஸ்ரீரமண சந்நிதிமுறை)

மூலம்

முகவைக் கண்ண முருகனர்

விளக்கவுரை

முகவைக் கண்ண முருகனடிமை

பதிப்பாளர்

ஸ்ரீரமண பக்த சமாஜம்

சென்னை

முதற்பதிப்பு 2011

ஸ்ரீ ரமண பக்த ஸமாஜம்
ஜி2, ஷிர்டி க்ரஹா
42/18, சம்பங்கி தெரு,
மேற்கு மாம்பலம்,
சென்னை 600 033.

தொலைபேசி: 044-23716495, 9444172613
மின்னஞ்சல்: srhcpl@gmail.com

சார்பாக,

ஸ்ரீ முருகனார் ஆராதனை அன்று, ஸ்ரீ ரமணாச்ரமத்தில் நிரந்தர அனுக்ரஹ விலாசத்துடன் விளங்கும் ஸ்ரீபகவத் சந்நிதியில், கர வருடம் ஆவணி மாதம் அமாவாசை 11-ம் தேதி, ஆயில்யம் நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் (28-08-2011, ஞாயிற்றுக்கிழமை) வெளியிடப்பட்டது.

ரூ.20/-

அச்சிட்டோர்:
ஜெய்கணேஷ் ஆப்செட் பிரின்ட்டர்ஸ்
19, வெங்கடசாமி லேன்,
மயிலாப்பூர்,
சென்னை 600 004.
தொலைபேசி: 044-24934535

பொருளடக்கம்

நன்றியுரை

அருணை ஈசன் மாபெரும் அக்னி ஸ்தம்பமாக தோன்றி பிரம்ம, விஷ்ணுக்களை ஆட்கொண்ட வரலாறு அனைவரும் அறிந்ததே! பின்பு மகாவிஷ்ணுவின் வேண்டுகோளின் பேரில் தன்னைக் குளிர்வித்துக் கொண்டு அருணாசலமானதும் பிரசித்தமே! மேலும் அருணாசல சிகரத்தில் ஓர் ஆலமரத்தின்கீழ் அருணகிரி சித்தனாக இருப்பதாக அருணாசல புராணம் கூறுகின்றது. இந்த அருணை மலை சத்ய யுகத்தில் தங்கமலையாகவும், திரேதாயுகத்தில் வெள்ளிமலையாகவும், துவாபர யுகத்தில் தாமிரமலையாகவும், கலியுகத்தில் கல்மலையாகவும் காட்சியளிக்கின்றதென்று புராணங்கள் கூறுகின்றன. இந்த மலையை 'ஞானத் திரளாய் நின்ற பெருமான்' என்று திருஞான சம்பந்தப் பெருமான் முதற்கொண்டு பற்பல ஞானியர் போற்றியுள்ளனர். ஈசுவரனின் சொரூபம் ஆன்ம ஞானமாய்த் திகழ்வதைக் காட்டிக் கொடுக்கும் இந்த ஞானமலை, உண்மையை அறியாது அறியாமையில் உழலும் அபக்குவிகளைக் காப்பாற்ற வேண்டி 20-ம் நூற்றாண்டில் பகவான் ஸ்ரீரமண மகரிஷிகளாக மனித வடிவம் தாங்கியது; மீண்டும் ஆதிகுரு தக்ஷிணாமூர்த்தியாக மோனோபதேசம் வழங்கி, இருந்ததை இருந்தபடி இருந்து காட்டியும், அது மட்டுமன்றி தம் உண்மை ஆன்ம இயல்பை உணர மாட்டாத மாந்தர்க்காகத் திருவாய் மலர்ந்து உபதேசித்தருளியும், எழுத்து வடிவில் ஸ்ரீரமண நூற்றிரட்டை அருளியும், இன்னோரன்ன பற்பல விதங்களில் ஆன்ம ஞான விளக்கமாய் ஒளிர்ந்தது. இந்த விவரங்களையெல்லாம் ஸ்ரீபகவானின் தலையாய அடியவர்

ஸ்ரீமுருகனர்

''அன்றிய மனத்தால் அரியும் பிரமனும்
பன்றியொடு அன்னமாய் இடந்தும் பறந்தும்
துருவொணுது எழுந்த ஜோதிப் பிழம்பாம்
திருவணு மலேயாய் திகழ்ந்ததோடு அவ்வரை
உத்தர சிகரத்து ஒருவரும் காணுது
அத்தகு சித்தனுய் ஆல்நிழல் அமர்ந்தோன் (ஸ்ரீபகவானுய்)
அத்தட வரையின் அடிக்கொரு முனியாய்
ஒத்து அனேவரும் காண்குற எழுந்தருளியும்''

என்று தாமியற்றிய கீர்த்தித் திருவகவலில் (143-150) பாடி மகிழ்கிருர். அதாவது அருணே ஈசன் அருணுசலமாய், அதன் உச்சியில் ஒருவராலும் காணவியலாத அருணகிரிசித்தனுய், பின்பு அதன் அடிவாரத்தில் அனேவராலும் காண்பதற்கெளிய ஸ்ரீபகவானுய் தோன்றினுரென்பது பொருள்.

இவ்வாறு ஈசுவரன் மனித வடிவில் ஸ்ரீபகவானுக திருவண்ணுமலேயில் அருள்பாலித்த விதங்கள் அநேகம்! அவற்றில் தம் திருக்கண்ணேக்கத்தால் ஆன்மானுபவத்தையே அருள்பாலித்ததை 'ஆன்மிகப் புரட்சி' என்றே கூறலாம். கலியுகக் கண்ணனுக விளங்கிய ஸ்ரீபகவான் தன் கண்களால் இந்த ஆன்மிகப் புரட்சியை செய்து 'கண்ணன்' என்னும் தம்முடைய திருநாமத்திற்குப் பெருமை சேர்த்தார். அவர்தம் திருக்கண்ணேக்கத்தால் பயன்பெற்ற அடியார் எண்ணற்றவர். அவர்களில் ஸ்ரீமுருகனர் குறிப்பிடத்தக்கவராக விளங்குகிருர்.

ஸ்ரீமுருகனர் ஸ்ரீபகவானின் திருக்கண்ணேக்க அருட் கடலில் மூழ்கியெடுத்த ஆன்ம முத்துக்களே ஒரு அழகிய முத்துமாலேயாக ''திருக்கண்ணேக்கம்'' என்னும் தலேப்பில் ஸ்ரீபகவானின் திருமார்பில் அழகுக்கு அழகு சேர்க்கின்றன.

ஆன்மானுபவத்தின் உச்சியில் நின்று 'ஸ்ரீபகவானின் திருக்கண்ணேக்கம்' என்னும் ஆன்மிகப் புரட்சியைக் கவிதை

மழையாக ஆன்ம முரசறையும் இந்தப் பாடல்களின் மகத்துவத்தை அதற்குரிய விளக்கவுரை யாலன்றி தகுந்தவாறு புரிந்து கொள்வது அசாத்தியமே! இந்தக் குறை நீங்க முகவைக் கண்ண முருகனடிமை திரு.கே. ஸ்ரீராம் அவர்கள் எடுத்துள்ள இம்முயற்சியைப் பாராட்டி மகிழ்கிறோம்.

இந்நூலாசிரியர் ஸ்ரீ முருகனார் மாபெரும் தமிழ்ப்புலமை பெற்றவராக மட்டுமல்ல; ஆன்மானுபவத்தில் ஸ்ரீ பகவானருளால் முழுமையடைந்தவராகவும் போற்றப்படுபவர். ஸ்ரீ ரமண நூல் திரட்டில் இடம் பெற்றுள்ள 'உபதேச மஞ்சரி' தோன்ற காரண கர்த்தராகிய சாது நடனானந்தர் ஸ்ரீ முருகனாரின் ஆன்ம ஞான மேன்மைகளைப் போற்றி 'முருக முப்பது, முருக பதினாறு' என்னும் நூலை இயற்றியுள்ளார். அந்த நூலில் முது பழம் ரமண பக்தை ஸ்ரீமதி. ஆனந்தம்மாள் ஸ்ரீ முருகனாரைப் போற்றி, வியந்தளித்த பாராட்டுரையையும், ஆனந்தம்மாளைப் பற்றிய விவரங்களைத் தெரியப்படுத்த வேண்டி 'நினைவில் நிறைந்தவை' நூலில் உள்ள திருமதி கனகம்மாள் அவர்களின் கட்டுரையையும், ஆனந்தம்மாளைப் போன்றே பூதவுடலை நீத்த திருமதி. கனகம்மாளைப் பற்றிய இந்த உரையாசிரியரின் கட்டுரையையும், ஸ்ரீ பகவானோடு அவருளால் ஸ்ரீ முருகனார் கண்ணேக்கமாடிப் பெற்ற ஆத்மானுபூதியை விவரிக்கும் காட்சிப் பதிகமும், பாராயணம் செய்வதற்கு வசதியாக மூலநூலையும் பிற்பகுதியாக இந்த நூலில் இணைத்துள்ளோம். இவையனைத்தும் ரமண அன்பர்களுக்கு சுவை பயப்பனவாக இருக்குமென்று நம்புகிறோம்.

இந்த நூலை அச்சில் கொணர்ந்த சூளைமேடு வி. ரமணன், தட்டச்சு செய்த சிராயுஷி. பானுமதி, அச்சுப் பிழை அகற்றிய திரு. என்.வெங்கடேஸ்வரன், *(Retired Senior Manager, Central Bank of India)* மற்றும் திருமதி. ஹேமா தியாகராஜன், அட்டைப் படத்தை அழகுற அமைத்த திருமயிலை ஜி. ரமேஷ், அச்சிட்ட ஜெய்கணேஷ்

ஆப்செட் பிரிண்ட்டர்ஸ் ஆகியோர் அனைவருக்கும் ஸ்ரீ பகவானின் பேரருளை யாசிக்கிறோம்.

தமிழ் இலக்கியத்திற்குப் பெருமை சேர்க்கும் ஸ்ரீரமண சந்நிதி முறையில் இரத்ன ஹாரமாகப் பிரகாசிக்கும் இந்த தெய்விக நூலை கண்ணுடைத்தோர் ஓதி உணர்ந்து, ஸ்ரீ பகவானொடு கண்ணேக்கமாடி இக, பர நலன்கள் அனைத்தும் வாய்க்கப்பெற்று, ஆன்மநேயச் செல்வராய்த் தாம் கண் பெற்றதன் பயனைப் பெற்றுய்வராக!

இப்படிக்கு,

எம். கே. வைத்தியநாதன்,
செயலர்,
ஸ்ரீ ரமண பக்த சமாஜம்.

சென்னை
07-08-2011
(ஸ்ரீ குஞ்சு சுவாமிகள் ஆராதனை நாள்)

ஓம் நமோ பகவதே ஸ்ரீரமணுய

ஸ்ரீ முருகனுரும் தருமபுத்திரரும்

ஞானியின் கண்களுக்கு அளப்பரிய சக்தியிருப்பதாக நமது பாரத தேசத்தில் கருதப்படுகின்றது. ஞானியின் கடைக்கண்ணேக்கம் அடியவரை மனித வாழ்க்கையின் இறுதிப் பயனுகிய ஆன்ம பதத்தில் சேர்க்குமென்பதை எண்ணற்ற நிகழ்ச்சிகளின் மூலமாக புராண, இதிகாசகங்கள் கூறுகின்றன. சக்ஷு தீக்ஷை என்று இது போற்றப்படுகின்றது. இதனுல் இறைவனின் திருவடிகளுக்கு அடுத்தபடியாக அவருடைய திருவிழிகளே மிக உயர்வாக மதிக்கப்படுகின்றன.

ஆதிகுரு தக்ஷிணுமூர்த்தி

ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்வாமி மௌனேபதேசத்தால் சனகாதி முனிவர்களுக்கு அருள்பாலித்தது புராணப் பிரசித்தம்! ஆனுல் அவ்வாறு சனகாதிகளுக்கு மோக்ஷபதம் அருளுவதற்கு முன்பாக ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்வாமி அவர்களுக்கு அருளிய சக்ஷு தீக்ஷையின் மஹிமையை ஸ்ரீபகவான் கூறியிருக்கிருர்.

ஒரு முறை ஸ்ரீமுருகனுருக்கு "சனகாதிகளுக்கு மௌனேபதேசத்தில் எவ்வாறு நம்பிக்கை ஏற்பட்டது?" என்று ஐயம் தோன்றியது. ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தியேயான ஸ்ரீபகவானையன்றி எவரே இந்த ஐயத்தை நீக்குவாரென்று அவர் ஸ்ரீபகவானைச் சரணடைந்தார்.

ஸ்ரீபகவான் "உமது ஐயம் நியாயமானதே! குருவினிடத்திலும், அவருடைய உபதேசத்திலும், அவர் காட்டும் மார்க்கத்திலும் நம்பிக்கையில்லாவிட்டால், சீடர் முழு சிரத்தையொடு அப்யாசம் செய்யார். சனகாதிகளும் ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்வாமிகளால் காந்தம் கண்ட இரும்புபோல்

ஈர்க்கப் பட்டாலும், முதலில் தத்தம் ஐயங்களை எடுத்துக் கூறி விளக்கங்களை வேண்டி நின்றனர்; ஈசனும் விளக்கினுர். ஐயங்கள் தீர்வதற்குப் பதிலாக, மேலும் பல ஐயங்கள் அந்த விளக்கங்களினுல் உருவாகின. குரு சிஷ்ய சம்வாதம் முடிவின்றி ஓராண்டு காலம் நீடித்தது. எனவே ஈசன் சீடர்களின் நிலைக்கு இரங்கி, தம் அருட்பார்வையை அவர்கள்மேல் நீண்ட நேரம் செலுத்திஞர். அந்த திருக்கண்ணேக்கச் சக்தியால் சனகாதிகள் தெளிவுற்று, மௌனத்தில் ஆழ்ந்தனர்; ஈசனின் மௌனேபதேசத்தில் நம்பிக்கை பெற்றனர்; குருவின் ஆன்மமோன நிலையில் ஒன்று கலந்தனர். ஓராண்டு காலம் குரு சிஷ்யர்கள் பேசியிருந்தாலும், அவர்கள் பல்லாண்டு காலம் மோனத்தில் ஆழ்ந்திருந்ததால், பேசியது மறைந்தது; மௌனேபதேசம் பிரசித்தி பெற்றது'' என்று விளக்கினுர். குருவின் அருட்கண்ணேக்கத்தால் சீடர்கள் தெளிவுற்று, மௌனேபதேசத்தில் நம்பிக்கை கொண்டனரென்ற விவரத்தை சாக்ஷாத் மஹேசனும் ஸ்ரீபகவான் மூலம் அறிந்து ஸ்ரீமுருகனுர் மகிழ்ந்தார். 'ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தியின் மௌனேபதேசம் வெறும் கட்டுக்கதை' என்று நம்பிக்கையிழந்திருந்த தற்கால சமுதாயத்தினருக்கு நம்பிக்கை ஏற்படுத்தும் வகையில் ஆதிகுரு ஸ்ரீ தக்ஷிணுமூர்த்தி ஸ்வாமியாக மீண்டும் ஸ்ரீபகவான் அருளையில் அமர்ந்தார். அவர் சந்நிதியின் மோன அமைதியில் தம் ஐயங்கள் தாமாகவே நீங்கப் பெற்றவர்கள் எண்ணிலடங்கார்!

சபரி மோக்ஷம்

ஸ்ரீ ராமபிரானை சபரி மூதாட்டியார் தரிசித்தவுடன் ''ஐயனே! என் தவ வலிமையாலும், குரு பக்தியாலும் தங்களை இன்று தரிசிக்கும் பாக்கியம் பெற்றேன். தங்கள் **அருட்பார்வையால்** உலகப் பற்று நீங்கியது. என் முன்வினை அழிந்தது'' என்ருர். உடற்பற்றே உலகப்பற்ருகையால் தேகான்ம புத்தி அழிந்ததென்றே இதை நாம் கொள்ள வேண்டும். சபரி

மோக்ஷம் இராமபிரானின் வாழ்வில் மிக முக்கியமான நிகழ்ச்சியாகப் போற்றப்படுகின்றது. ஆன்ம ஞானமுற்றவர் உடலை ஒரு பொருட்டாக மதிப்பதில்லை. சபரி மூதாட்டியாரும் தீ மூட்டி அதில் தம் உடலைத் துறந்தார். பின்பு ஒரு அழகிய பெண் வடிவத்தில் அவர் அந்தத் தீயிலிருந்து வெளிப்பட்டு ஆன்ம உலகிற்குச் சென்றதை இராம, லக்ஷ்மணர்கள் பார்த்தார்களென்று வால்மீகி ராமாயணம் கூறுகின்றது.

ஸ்ரீ ராமபிரானின் பாத தீக்ஷையினால் கல்லான அகலிகை பாப விமோசனமுற்று மீண்டும் தன்னுடைய மானிட தேகத்தைப் பெற்றார். ஆனால் அவருடைய சக்ஷு தீக்ஷையினால் சபரி மூதாட்டியார் ஜனன-மரணங்களற்ற ஆன்ம பதத்தை அடைந்தார். ஞானியின் சக்ஷு தீக்ஷ அத்தகைய சக்தி வாய்ந்தது.

அடியார்க்கு அருளை வழங்குவது மட்டுமல்ல; துஷ்டரை எரிக்கும் சக்தியும் ஞானியின் கண்களுக்கு இருப்பதை புராணங்கள் கூறுகின்றன. ஈசுவரன் மன்மதனையும், திரிபுராசுரர்களையும் விழித்தே எரித்தார். அகத்திய மாமுனி இல்வலன் என்ற அரக்கனை பார்வையாலே எரித்ததை மகாபாரதம் கூறுகின்றது. இவ்வாறு 'சிஷ்டபரிபாலனம்; துஷ்டநிக்ரஹம்' ஆகிய இரண்டையும் செய்ய வல்லமை படைத்தது ஞானியின் திருக்கண்ணோக்கமாகும்.

'ஞானமே ஞானி நரன் அன்று' என்றாலும் (ஆன்ம ஞானத்தின் முழு உருவமே ஞானி என்றாலும்), அவருடைய கண்களே ஆன்ம அருளை மிகப் பெருத்த அளவில் பொழிகின்றனவென்று ஆதி சங்கரப் பெருமானும் நவில்கின்றார்:

பலத்துளைக் குடத்தில் தீபம் பாய்கதிர் போல் யார்ஞானம்
விழிமுதற் பொறிவாய்ப் பாய்ந்து வெளிசரித் தறிந்தேனென்று
-ஸ்ரீ தக்ஷிணாமூர்த்தி தோத்திரம் (5), ஸ்ரீ பகவான் மொழிபெயர்ப்பு

பொருள்: பலதுளைகள் உள்ள குடத்திலிட்ட தீபம் அவற்றின் வழியாக வெளியே பாய்ந்து செல்வதைப் போல, விழிகள் முதலான ஐம்பொறிகளின் மூலம் ஞானியின் அருள் வெளியே பாய்ந்து ஓடுகின்றது.

விதுரரின் விழி தந்த ஆன்ம உணர்வு

பாரதப் போர் முடிந்து தர்மபுத்திரர் ஆட்சியின்போது, ஒருநாள் த்ருதராஷ்ட்ரன் உலகாதி சுகங்களை நீக்கி காட்டில் வசிக்கத் தீர்மானிக்கிறார். காந்தாரியும் குந்தியும் அவரொடு காட்டிற்குச் சென்றுவிடுகின்றனர். அவர்களைச் சந்திக்க பஞ்ச பாண்டவர்கள் காட்டிற்குச் சென்று சுமார் ஒரு மாத காலம் தங்கினர். அப்போது ஒருநாள் தர்மபுத்திரர் விதுர மஹாத்மா தூரத்தில் செல்வதைப் பார்க்கிறார். அவரைப் பின்தொடர்ந்தோடி, வெகு சிரமப்பட்டு சந்திக்கிறார். சரிவர உணவில்லாததினால் மிகவும் மெலிந்த தேகத்தொடு காணப்பட்ட விதுரரின் கண்கள் மட்டும் மிகப் பிரகாசமாக ஒளிர்ந்தன. விதுரர் தர்மபுத்திரரை உற்றுநோக்கி "நான் இப்போது உன் உடலில் பிரவேசிக்கிறேன்" என்றார். அவரது கண்களிலிருந்து பொங்கிப் பெருகிய ஒளிவீச்சின் தாக்கத்தால் தர்மபுத்திரர் தேக உணர்வை இழந்தார். வெகுநேரம் கழித்து மீண்டும் அவர் சுயநினைவிற்குத் திரும்பியபோது விதுரரின் உயிரற்ற உடலைக் கண்டார். இவ்வாறு தர்மராஜனின் அவதாரமாகிய விதுரமஹாத்மா பூவுலக வாழ்வை நீத்தார். அவருடைய மறைவிற்குப்பின், விதுரரின் தபோபலம் அவருடைய சக்ஷு தீக்ஷையின் மூலமாகத் தருமபுத்திரரைச் சென்றடைந்தது. விதுரர் இவ்வாறு செய்ததற்குக் காரணம் தர்மராஜனின் அம்சமாக குந்திதேவியின் மகனாக தருமபுத்திரர் பிறந்தவரென்பதினாலேயேயாகும். இவ்வாறு விதுர மஹாத்மாவின் அருள் பெற்றதினால் தருமரின் உடல் அழியாத்தன்மை எய்தியது; அவரால் தம் மானிட தேகத்தோடு தேவலோகத்திற்குச் செல்லவும் முடிந்தது. தேவலோகத்திற்குச்

சென்றபிறகு, தேவேந்திரனின் வேண்டுகோளின் பேரில் அங்கு தம் உடலை நீத்து சுவர்க்கம் புகுந்தார் தர்மபுத்திரர். ஞானியாகிய விதுரர் தம் கண்களை தருமருடைய கண்களோடு இணைத்து சக்ஷு தீக்ஷை அருளி அவருடைய தேகப்பிரக்ஞையை அழித்ததைப் போல, ஸ்ரீபகவான் தம் திருக்கண்ணோக்கத்தினால் ஸ்ரீமுருகனாருக்குச் செய்வித்த விவரம் பின்னால் வரும்.

இந்த நிகழ்ச்சி ஒரு ஞானி தம் திருக்கண்ணோக்கத்தினால் தேகான்மபாவத்தை அழித்து ஆன்ம உணர்விற்கு ஒருவரை விழித்தெழச் செய்ய இயலும் என்பதை எடுத்துக் காட்டுகிறது. இது நூற்றுக்கு நூறு உண்மை என்பதை தற்காலத்திய மாந்தருக்கு நிரூபித்துக் காட்டியவர் ஸ்ரீபகவான். ஆர்தர் ஆஸ்போர்ன், பேராசிரியர் N.R. கிருஷ்ணமூர்த்தி, ஸ்ரீமதி T.R. கனகம்மாள் ஆகியோரின் அனுபவங்களே இதற்குத் தகுந்த சாட்சியங்களாகும்.

ஸ்ரீ பகவானின் திருக்கண்ணோக்க மஹிமை

ஸ்ரீபகவானின் அணுக்கத் தொண்டராகத் திகழ்ந்த ஆர்தர் ஆஸ்போர்ன் ஸ்ரீபகவானின் அருட்கண்ணோக்க மஹிமையைத் தன் சுவானுபவத்தில் உணர்ந்ததை "ரமண அருணாசலா" என்னும் கட்டுரைத் தொகுப்பில் கூறுகிறார். "ஸ்ரீபகவான் காட்டியருளிய நானார் விசாரத்தில் ஆழ்ந்து போக வெகுவாக முயற்சித்தும் கைகூடவில்லையென்று நான் ஏங்கியதுண்டு. ஒரு நாள் ஸ்ரீபகவானின் அருட்கண்ணோக்கம் முழுவதுமாக என் விழிகளில் படிந்ததைக் கண்டேன். தேக உணர்வு தன்னிச்சையாகவே அகன்றது. காலமும் மோனத்தில் ஆழ்ந்து செயலற்று விட்டதைப் போன்ற உணர்வு தோன்றியது. பின்பு சுயநினைவு வர வெகுநேரமாகி விட்டது. ஸ்ரீபகவானோ ஏதுமறியாதவரைப் போல் அமர்ந்திருந்தார். எனக்கோ "நானார் விசாரத்தில் ஈடுபட இவ்வளவு ஆர்வமிருப்பின், முன்னமே என்னிடம் கேட்டுக்கொண்டிருக்கலாமே" என்று அவர் கூறியதுபோல் தோன்றியது. இந்நிகழ்ச்சிக்குப் பின் என்னுள்

வெகு ஆழமாக ஆழ்ந்து-நானார் விசாரம் பயிலுவது சாத்யமாயிற்று. கேளாமலே அருளிய இப்பெருங்கருணையை என்னவென்பேன்!"

பேராசிரியர் N.R. கிருஷ்ணமூர்த்தி தம்மை ஸ்ரீபகவான் உற்று நோக்கவும் அதன் பிரகாசத்தினால் தாம் தேகப் பிரக்ஞையை முற்றிலும் இழந்ததாகக் கூறியுள்ளார். இது ஸ்ரீரமணாசிரம வெளியீடாகிய அருணை முனிவர் (Sage of Arunachala) என்னும் வீடியோ நாடாவில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

ஸ்ரீமதி T.R. கனகம்மாள் ஸ்ரீபகவானின் சந்நிதியில் அமர்ந்திருந்தபோது பலமணி நேரங்கள் தாம் தேகாபிமானம் அற்றுப்போனதை இந்த உரையாசிரியரொடு நிகழ்த்திய உரையாடல்களில் பலமுறை குறிப்பிட்டுள்ளார்.

காவ்ய கண்ட கணபதி முனிவர் முதன் முறையாக விருபாக்ஷி குகையில் 1906-ல் ஸ்ரீபகவானை தரிசனம் செய்து, மந்திர ஜெபத்தின் தாத்பரியத்தை வினவியபோது, ஸ்ரீபகவான் முதலில் தம் அருட்பார்வையை கணபதி முனிவர் மீது சுமார் 15 நிமிடங்களுக்குச் செலுத்தினார். இதனால் கணபதி முனியின் மனம் தெளிந்து, சாந்தமடையவும், பின்னர் திருவாய்மலர்ந்து சொற்களினால் உபதேசம் செய்தார். 1896-ல் அருணை வந்தடைந்த பின் ஸ்ரீபகவான் திருவாய் மலர்ந்து செய்த முதல் உபதேசம் இதுவே ஆகும். தாருக வன ரிஷிகளுக்கும் ஈசன் இவ்வாறு முதலில் தம் அருட் கண்ணோக்கத்தைச் செலுத்திய பின்பே வார்த்தைகளினால் திருவாய் மலர்ந்து உபதேசித்தாரென்பதை ஸ்ரீரமணசந்நிதி முறையில் அமைந்துள்ள கீழ்கண்ட பாடலில் காணலாம். ஸ்ரீரமண சாம்ராஜ்ஜியத்தில் ஆஸ்தானப் புலவராக விளங்கிய ஸ்ரீமுகவைக் கண்ண முருகனார் தாமியற்றிய திருவுந்தியாரில் ஈசுவரனின் லீலைகளை ஸ்ரீரமண லீலைகளாகப் பாடிவரும் போது, தாருகவன ரிஷிகளை ஈசன் தடுத்தாட் கொண்ட நிகழ்ச்சியை

விவரிக்கிருர். அதில் அவர்கள் கர்வம் அழிந்து, ஈசனின் அருள் உபதேசங்களை நாடி நின்றனர். இந்த கட்டத்தில் ஸ்ரீமுருகனுர் கீழ்கண்ட பாடலை இயற்றினுர்.

காத்தருள் என்று கரையக் கருணைக்கண்
சேர்த்து அருள் செய்தனன் உந்தீபற
சிவன் உபதேசம் இது உந்தீபற.

-ஸ்ரீரமணசந்நிதி முறை, 1376

(கரைய-இறைஞ்ச)

கருத்து: எங்களை ரக்ஷித்தருள வேண்டுமென்று தாருகவன ரிஷிகள் இறைஞ்சவும், ஈசன் அவர்களைத் தம் கருணை விழிகளால் உற்று நோக்கினுர். அவர் அவர்களுக்கு வழங்கிய முதல் உபதேசம் இதுவே (சக்ஷுர்தீக்ஷையே) ஆகும். அதாவது தம் கருணை விழிகளால் அவர்களைக் கடாக்ஷித்து, தம் உபதேசத்தை சரியான முறையில் அவர்கள் கிரகித்துக் கொள்ளும்படிக்கு அவர்களைப் பக்குவப்படுத்தியதே ஈசன் அவர்களுக்குச் செய்த முதல் உபதேசம் (தீக்ஷை) ஆகும். பின்பு சனகாதிகள் போன்று சக்ஷுர்தீக்ஷை ஒன்றினுலேயே உண்மையை உணர இயலாத அவர்களின் பக்குவ நிலையைக் கண்டிரங்கி, சொற்களினுலும் உபதேசம் வழங்கி அவர்களை ஈசன் ஆட்கொண்டார். இவ்வாறு ஈசன் முதலில் விழிகளினுல் உற்று நோக்கியது பற்றிய உண்மை விவரத்தை ஸ்ரீமுருகனுர் தெரிந்து கொள்ள ஆவல் கொண்டார். ஏனெனில் உண்மையில் அவ்வாறு நடைபெற வில்லையெனில் மேற்கண்ட பாடலை மாற்றியமைக்க வேண்டியதன் அவசியத்தை அவர் உணர்ந்திருந்தார். மேலும் ஸ்ரீரமண சந்நிதி முறையை ''ஸ்ரீ பகவான் தான் இயற்றுகிருர்; தாம் ஒரு கருவியே'' என்று திடமாக அவர் நம்பியதால், அதனைத் திருத்தத் தமக்கு ஏதும் அதிகாரமில்லை என்றும் அவர் நினைத்தார். இதை ஸ்ரீரமண சந்நிதிமுறை நூல்வரலாற்றில் ''என் இதயத்தே இலங்கு அவ்விறைவன் (ஸ்ரீபகவான்), என்னது செய்கை இலாதே ரமணசந்நிதிமுறை நூல் சாற்றினன்'' என்று

குறித்துள்ளார். ஆகவே கயிலைநாதனும் ஸ்ரீபகவானே இந்த குறைப்பத்தைத் தீர்க்கவேண்டுமென்று ஸ்ரீபகவான் திருவடிகளில் சரணடைந்தார். ஸ்ரீபகவானோ பாடலைத் திருத்த வேண்டிய அவசியமில்லையென்றும், 'அப்படித்தான் நடந்தது' என்றும் கூறிவிட்டார். பல யுகங்களுக்கு முன் நடந்த நிகழ்ச்சியைப் பற்றிய இந்த உண்மை விவரத்தை ஸ்ரீபகவானிடமிருந்துப் பெற்றுத் தந்ததிற்காக ஆன்மிக உலகம் ஸ்ரீமுருகனாருக்கு மிகவும் நன்றிக் கடன்பட்டுள்ளது.

திருவருணை ஈசனே மானிடதேகம் தாங்கி ஸ்ரீபகவானாக அருணையில் மீண்டும் அமர்ந்தபோது தன் பரசொரூபத்தை எத்துணைதாம் மறைத்த போதிலும் தம் விழிகளினின்று பெருகியோடிய பரங்கருணைப் பிரவாஹத்தைக் கட்டுப்படுத்தி மறைக்க இயலவில்லை. ஸ்ரீபகவான் அடியவர் கண்ணை உற்று நோக்கிடும் போது, அந்தப் பார்வை அடியரின் இதயத்துள் ஊடுருவி, எதனைக் கொண்டும் அறிவிக்க இயலாத மெய்ப் பொருளை அவர்கள் உணரச் செய்துவிடும். இந்த கடைக்கண்ணோக்கம் ஸ்ரீபகவானுக்கே உரியதோர் தனிச்சிறப்பு. சங்கல்பதீக்ஷை, ஹஸ்ததீக்ஷை, பாததீக்ஷை, ஸ்பரிசதீக்ஷை போன்ற எவ்வித தீக்ஷையும் எவருக்கும் செய்திராத ஸ்ரீபகவானிடம் அவர் விழி வழி பெருகியோடிய அருள் வெள்ளமே சக்ஷுதீக்ஷையாக விளங்கியது. காரணமில்லாப் பெருங்கருணை தீக்ஷையாக அடியார்கள் இதைக் கொண்டாடி மகிழ்ந்தனர்.

அதனால் ஸ்ரீபகவானின் விழிகளை மறக்க இயலவில்லை என்றும் கூறுவர். ஏனெனில் ஸ்ரீபகவானின் விழிகளினின்று பொங்கிப் பெருகிய ஆன்ம அருள் வெள்ளமே அவருடைய விழிகளின் அழகுக்கு அழகாக ஒளிர்ந்தது. அவரை நாடி வந்தோர்-பாமரரோ, பண்டிதரோ, செல்வந்தரோ, வறிஞரோ, ஆண்மக்களோ, பெண்டிரோ எவராயினும் சரி அனைவருக்கும் இந்த நயனதீக்ஷை தவறாது கிடைத்தது. ஸ்ரீபகவானின்

சந்நிதியில் கண்ணெடு கண் கலக்கும் இந்த இன்பக்காட்சி ஜாதி, மத, நிற, தேச, கால வேறுபாடுகள் ஒரு சிறிதுமின்றி அனைத்து மெய்யடியார்களின் அனுபவமாக விளங்கியது. உண்மையில் அருணேசனிடமிருந்து தாம் பெற்ற அனுபவத்தையே இந்த அண்ணுமலை ரமணேசன் தன் கண்களின் மூலம் தன்னடியார்க்குக் காட்டினுர். இதையே "கண்ணுகத் தன்னருளே காட்டினுன் தன்னடியேற்கு" (பாடல் 1638) என்று இந்நூலில் போற்றுகிருர் இந்நூலாசிரியர். பல சமயங்களில் ஸ்ரீபகவான் கண்ணிமைக்காது அண்ணுமலையை முழுமையாக நோக்கியவாறு பலமணி நேரங்கள் வீற்றிருப்பார். அப்பார்வையில் எந்த வித குறிப்பும் இராது. அவர் உள்ளத்தின் ஆழத்தில் எல்லையற்று நீடிக்கும் சலனமற்ற அமைதிநிலை புறத்தோற்றத்திலும் சலனமற்ற திருஷ்டியாக நீடிக்கும். அந்த சமயங்களில் அவருடன் அமர்ந்திருக்கும் அடியாரும் அவர்களை அறியாமல் தம்முள் ஆழ்ந்து ஆன்ம இன்பத்தை அனுபவிப்பர். இவ்வாறு ஸ்ரீபகவான் அண்ணுமலையானின் ஞானக் கண்ணெடு தம் ஊனக் கண்ணை இணைத்திருப்பார். அவ்வாறே ஸ்ரீமுருகனுர் ஸ்ரீபகவானின் திருவுருவத்தில் தம் ஊனக்கண்ணை இணைத்துப் பலமணி நேரங்கள் அமர்ந்திருப்பதை அன்பர்கள் கவனித்துள்ளனர். அதே போல ஸ்ரீபகவான் தன் மானிடவேடத்தைக் களைந்த பின்பும் ஸ்ரீ முருகனுர் அண்ணுமலையையோ அல்லது ஸ்ரீபகவானின் திருவுருவப் படத்தையோ கண்ணிமைக்காது நோக்கியவாறு பலமணி நேரங்கள் நின்றே அல்லது அமர்ந்தோ இருப்பதை அன்பர்கள் பார்த்துள்ளனர்.

இவ்வாறு ஸ்ரீபகவானின் திருக்கண்ணேக்க மஹிமையை முழுவதும் உணர்ந்த ஸ்ரீமுருகனுர், இதைத் தன் தனிப்பெருஞ் சொத்தாக அனுபவித்தார். ஒருமுறை காலைப்பொழுதில் காட்டில் இலைபறிக்க அடியவர்களொடு ஸ்ரீபகவான் சென்ற போது ஸ்ரீபகவான் ஸ்ரீமுருகனுரை தன்னைப் பின்தொடருமாறு கண்ணசைவில் தெரிவித்து, ஒரு தனியிடத்திற்குச் சென்றுர்.

பின்பு அங்கு ஸ்ரீமுருகனாரை உற்று நோக்கவும் தேக உணர்வை இழந்த ஸ்ரீமுருகனார் மீண்டும் சுயநினைவிற்கு வந்த போது மாலையாகி விட்டிருந்தது; ஸ்ரீபகவானைக் காணவில்லை; பொங்கிப் பெருகிய ஆன்ம உணர்வு அவரை மூழ்க வைத்த போதும் கூட, ஒருவாறு தன் இருப்பிடத்திற்கு வந்து சேர்ந்தார். இவ்விதம் ஸ்ரீபகவானோடு கண்ணோக்கமாடிய நிகழ்ச்சியை ஸ்ரீரமணசந்நிதி முறையில் கீழ்கண்டவாறு குறித்துள்ளார்.

இலைபறிக்கென வனத்தெனைக் கொடுபோகி
உலைவறக் கண்ணோக்கு உவகையின் உதவியும்
உகண்ட என் உயிர் உணர்வு ஒடுக்கி நள்ளியாமத்து
அகண்ட சிவானுபவ வாலறிவு அளித்தும்

-கீர்த்தித்திருவகவல் 225

அ.ப-ரை: கொடுபோகி-கொண்டு சென்று, வாலறிவு -கடவுளறிவு (பிரம்மஞானம்). உலைவு+அற-உலைவற-சஞ்சலம் நீங்க.

இவ்விதம் தேகான்மபாவம் அற்றுப்போகும் அனுபவத்தையே தர்மபுத்திரர் விதுர மஹாத்மாவின் வீரவாள் விழி வீச்சினால் அடையப் பெற்றார். இது ஏதோ கட்டுக்கதையல்ல; உண்மை நிகழ்ச்சி என்பதையே ஸ்ரீபகவானின் மூலமாக ஸ்ரீமுருகனார் பெற்ற அனுபவம் நமக்கெல்லாம் உணர்த்துகின்றது.

மேலும் ஸ்ரீபகவானின் திருக்கண்ணோக்கச் சக்தியை ஸ்ரீரமணசந்நிதி முறையில் பற்பல பாடல்களில் குறித்திருக்கிறார். உதாரணத்திற்கு சில:

(1) **அடியேன் வினையை நுதற்கண்ணால் விழித்தே**
அழித்தாய் வேங்கடவா ***453***

(2) **விச்சை மிக்க நின் வீரவாள் விழிவீசி மன்மமேல் வேறு**
செய்தனை ***1123***

(3) அகந்தையேற்கு அருட்கண் பாலித்து 527

(4) ஈந்தாய் இன்னருள் இவ்வெளியேனைக் கடைக்கணித்தாய் 579

(5) பேசா மோனநிலை அடிபேணி அடைந்தவர்க்குத்
தேசார் திட்டியினால் தினம் சேர்த்தருள் வேங்கடவா 581

(6) அவுணர் புரம்போல் என்புரமும்
பொடியாப் புரிந்து புன்முறுவல்
பொங்கு முகத்தான் வேங்கடவன் 750

(7) எழிலுக் கொருபே ரெல்லை யெனவே
யிமையா தென்கண்ணிணை நோக்கக்
குழகக் கோலங் கொண்டேன் னுயிரைக்
கோல விழியால் குழை வித்தான் 317

(8) அடியேத்தும் அன்பரைத்தன் அந்தமில் வீட்டின்பக்
குடியேற்றும் மிக்க குணநலத்தான் எந்தம்
மிடியால் குறைந்தகுடில் வேவஅருள் தீயால்
பொடியாக்கு மூரல் புராந்தகன்தாள் போற்றி
-ஸ்ரீரமணபுராணம், 193-196

அ.ப-ரை: தேசார்=தேசு+ஆர்=ஒளிபொருந்திய, திட்டி=திருஷ்டி (பார்வை), *(அருட் தீ-சக்ஷு தீக்ஷை)*

ஆனால் இவற்றிலெல்லாம் திருப்தியுறாது, ஸ்ரீபகவானின் விழியழகை திருக்கண்ணோக்கம் என்னும் தனித்தலைப்பிலே பாடவேண்டு மென்று ஸ்ரீமுருகனாருக்குத் தோன்றியது தமிழ் கூறும் நல்லுலகம் செய்த பாக்கியமே!

ஏனெனில் எத்துணையோ அடியார்கள் ஆன்மவஸ்துவை பற்பல தெய்வங்களாக வர்ணித்து, தமக்குகந்த தெய்வத்தின் விழிகளின் அழகைப் போற்றி மிகச் சிறந்த தோத்திரப் பாமாலைகளை இயற்றியுள்ளனர்; இத்தகைய தோத்திரங்கள் இறைவனின் அல்லது இறைவியின் விழிகளின் அழகையும், அந்த விழிகளினால் பக்தர்கள் அடையும் இக, பர லாபங்களையும்

எடுத்துரைக்கின்றன. இவற்றில் ஸ்ரீஅருணகிரிநாதர் வகுத்துள்ள "கடைக்கணியல் வகுப்பு" தமிழ் இலக்கியத்தில் மிகச் சிறந்ததோர் இடத்தைப் பெற்றுள்ளது. ஆனால் ஸ்ரீரமண சந்நிதி முறையில் ஸ்ரீபகவானின் விழிகளின் பெருமைகளைப் பற்றி ஸ்ரீமுருகனார் இயற்றியுள்ள "திருக்கண்ணோக்கம்" புத்தம் புதியது; புது வகையது; புத்தமுதமானது; ஏனெனில் இதில் பக்தியும் ஞானமும் ஒரு சேரப் பொங்கிப் பெருகிப் பரிபூரணமாய் நிறைந்துள்ளன; வேதாந்த பரமாய்க் காண்போர்க்கு ஆன்மஞான அனுபவத்தையும், பக்தி பூர்வமாய்க் கரைந்து உருகுவார்க்கு ஆன்ம இன்பத்தையும் வாரி வாரி வழங்குவது இப்பகுதி.

ஸ்ரீமுருகனாரின் சுவானுபூதியில் உருவாகி, ஓதும் அன்பர்களை ஸ்ரீரமணானந்த சாகரத்தில் திளைக்க வகை செய்யும் இந்த கிரந்தம் தமிழ்இலக்கியமே இதுவரை கண்டிராத ஒன்று! இத்தகையதோர் நூலை இயற்றியதினால் தெய்வப் புலவர்களாம் கம்பநாட்டாழ்வார், வள்ளுவப் பெருந்தகை, இளங்கோவடிகள் ஆகியோர் வரிசையில் வணங்கத்தக்கவராக உயர்ந்து ஒளிர்கிறார் ஸ்ரீமுருகனார்.

மற்றைய பெரியாரைப் போன்று ஸ்ரீமுருகனாரும் திருவுருக்கண்டபத்து, திருவுருத்திறம், திருவடித் திருத்தாண்டகம், திருப்பதங்கண்டதிறன், திருத்தோணோக்கம், புணர்ச்சிப் பத்து, சென்னிப்பத்து, தொழுத பத்து, (தோள்களின் அழகு) என்று பாதாதிகேசம் ஸ்ரீபகவானைப் புகழ்ந்து பாடியிருக்கிறார். ஆனால் திருக்கண்ணோக்கத்திலோ மனித வாழ்வின் எல்லைகளைக் கடந்து, தெய்விகத்தின் சிகரத்திற்கே பயில்வோரை அழைத்துச் செல்கிறார். எனவே உள்ளபடி உரைப்பின், திருக்கண்ணோக்கம் ஒரு பக்திப் புயலாக உருவெடுத்து, அதில் ஆழங்கால்படும் அன்பரை, ஆன்ம சாம்ராஜ்ஜியத்தின் கதவுகளைப் பலாத்காரமாகத் திறந்து, ஆன்ம வஸ்துவாம் ஸ்ரீபகவானின் திருவடிகளில் சேர்ப்பிக்கும்

வல்லமை படைத்ததாக விளங்குகிறது. தோண்டத் தோண்ட வற்ருது வழங்கும் ஒரு பக்திச் சுரங்கமாகத் திகழ்ந்து அதில் ஆன்ம மெய்ஞ்ஞானத்தைத் தேக்கி நிற்கும் இந்த ஒப்புயர்வற்ற நூல் பக்தியும் ஞானமும், ஆன்றோர் கூற்றின்படி ஆன்மவஸ்துவில்தான் இறுதியில் சாதகரைச் சேர்க்கின்றனவென்பதற்குத் தலைசிறந்ததோர் எடுத்துக் காட்டாக பக்தி இலக்கியத்தில் சுடர்விட்டுப் பிரகாசிக்கிறது.

இந்நூலில் கண்டபடி ஸ்ரீ பகவாளுெடு திருக்கண்ணேக்கம் ஆடுபவர் ஆன்ம ஞானம் எய்துவரென்பது உறுதி! அகந்தை மயக்கத்தை மாய்க்கும் மோன விழிகளைத் தாங்கிய அவர்தம் திருவுருவப் படங்கள் இந்த உண்மையை நமக்கு ஞாபகப்படுத்தியபடி உள்ளன.

"கண்டவர் விண்டிலர்; விண்டவர் கண்டிலர்" என்பர். ஸ்ரீபகவானருளால் ஸ்ரீமுருகனுர் காணவும் செய்திருக்கிருர். கண்டு, ஸ்ரீபகவாளுெடு கண்ணேக்கமாடவும் செய்திருக்கிருர். அவ்வாறு கண்டு, அனுபவித்ததை இந்த அதி அற்புதப் படைப்பிலே விண்டு விளக்கியும் இருக்கிருர். தமிழ் இலக்கியமே உருக் கொண்டெழுந்ததோர் அதிசய நூலாம் ஸ்ரீரமண சந்நிதி முறைக்கே பெருமை சேர்க்கும் இவ்வரிய நூலை உத்தம அதிகாரிகள் (பக்குவிகள்) சிரத்தையொடு ஓதி ஸ்ரீபகவானருளால் இக, பர சுகங்களை எய்துவராக!

முகவைக் கண்ண முருகனடிமை

சென்னை
05.06.2011 (புனர்வசு நன்னுள்)

நமோ ரமணய

திருக்கண்ணேக்கம்

நூல்

உற்பலமாம் கண்ணீர்மண் ணேடுஇயைந்தும் கண்ணேடும்
பொற்புடைமெய்ஞ் ஞானதருப் புலப்படநீர் கண்டீரோ
மற்புயவான் கவடுவிட்டு மன்னுயிர்மேற் கண்ணேடும்
கற்பகவேங் கடனெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 1612

பொ-ரை: குவளைக் கண்களையுடைய மங்கையர்காள்! மண்ணில் வந்து உதித்தும் கண்களினுல் மெய்ஞ்ஞான ஒளியைப் பாய்ச்சும் ஆன்மஞான விருக்ஷத்தை நீவீர் பார்த்தீர்களா? ஆன்ம கதிர்களாகிய வலிமை பொருந்திய கிளைகளைப் பரப்பி மன்னுயிர்கள் மீது தன் அருட்பார்வையை வீசி, அடியார்கள் விரும்புவதை அளிக்கும் கற்பக விருக்ஷமாகிய ஸ்ரீ வேங்கட ரமணனெடு நாம் கண்ணேக்கமாடிக் களிக்க மாட்டோமோ? (களித்திருப்போம்; எனவே நீங்களும் எங்களோடு இந்த ஆன்ம இன்பத்தில் பங்கு கொள்ளுங்கள் என்றவாறு).

அ.ப-ரை: உற்பலம் - குவளைமலர், பொற்பு - அழகு, தரு - மரம், (விருக்ஷம்) மற்புயவான் கவடு = மல் + புயம் + வான் + கவடு = வலிமை மிக்க தோள்களாகிய கிளைகள், மண்ணேடியைந்தும்-மண்ணில் வந்து உதித்தும்.

வி-ரை: மண்ணேடியைந்தும் என்றதாவது

ஆன்ம வஸ்துவாகிய ஸ்ரீபகவான் மண்ணில் மானிட தேகமேந்தியும் உலகப்பற்றில் மூழ்கி அகந்தை வயம் சேராது தன் மூல ஆன்ம சக்தியை கண்களின் மூலம் வெளிப்படுத்திய அதிசயத்தை குறித்தேயாகும். உற்பலம் குவளை மலரைக் (Water-Lily) குறிக்கும். (உ.ம்: நீலோற்பலம்-நீலநிறக்குவளை மலர்).

எண்ணியவை எண்ணியவாறு எய்திடலாம் ஏழையீர்
மண்ணிடைவண் குளத்துறங்கு மதர்ப்புடைமீன் விழிபோல
உள்நிலவு நாட்டத்தால் உளத்துறங்கும் ஓரியல்பால்
கண்ணிமையா ரமணனொடு கண்ணோக்கம் ஆடாமோ. 1613

பொ-ரை: ஆன்ம செல்வத்தை இழந்து வருந்துறும் ஏழையீர்! குளத்தில் உறங்கும் போதும் மீனின் விழி மூடாது விழித்திருப்பதைப் போல், இதயத்தில் மூழ்கி உறக்க விழிப்பில் ஆழ்ந்து கண்ணிமைக்காத ஸ்ரீ ரமணபிரானொடு நாம் கண்ணோக்கம் ஆடி களித்திருக்க மாட்டோமோ? ஏனெனில் அவ்வாறு கண்ணோக்கமாடுதலே விரும்பும் அனைத்தையும் விரும்பியபடி அடைந்திடச் சிறந்த உபாயமாகும்.

அ.ப-ரை: உண்ணிலவு - உள் + நிலவும், உளத்துறங்கும் ஓர் இயல்பு - ஜாக்ரத்சுழுப்தி (உறக்க விழிப்பு)

உளத்து உறங்கும் ஓர் இயல்பால் என்றதாவது

வி-ரை: கனவு, நனவு, உறக்கம் என்னும் மூன்று நிலைகளும் மனிதரின் அனுபவமாக இருப்பதால் ஆன்மநிலை துரியம் அல்லது நான்காவது நிலை எனப்படுகிறது. இந்த துரிய ஆன்ம நிலையை உணர்ந்து கொள்ளுவதே ''உண்மை விழிப்பு'' ஆகும். இந்த உண்மை விழிப்பு நிலை கனவு, விழிப்பு, உறக்கம், ஆகிய மூன்று நிலைகளையும் கடந்து நிற்பதால் இது ''துரியாதீதம் (துரிய + அதீதம்)'' என்றும் வழங்கப்படுகிறது. இந்த உண்மை விழிப்பு நிலையை இடையிடையே வந்து போகும் ''தூக்கக் கலப்பேயில்லாத முழுவிழிப்பு'' என்றாலும் ''என்றும் விழிப்பு என்பதே இல்லாதப் பெருந்தூக்கம்'' என்றாலும் மிகப் பொருந்தும் (ஒப்பு: குருவாசகக் கோவை 940). ஆகவே இந்த துரியாதீத மெய்யான்மநிலை ஜாக்ரத் சுழுப்தி, நாணத்துயில், துயிலாவிழிப்பு, சாவாப்பிறப்பு, பிறவாச்சாவு, உறக்க விழிப்பு, காணாமல் காணுதல், தூங்காமல் தூங்குதல், யோக நித்திரை என்று பற்பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இந்த துரியாதீத ஆன்மநிலையில் நிலைபெற்றிருப்பதால் மகாவிஷ்ணு

பாம்புப் படுக்கையில் யோக நித்திரை புரிகிறுர் என்கிறது புராணம். கண்களை மூடியபடி முழுவிழிப்பில், ஸ்ரீஈசுவரன் செய்யும் தபசும், தியானமும் இதுவே. ஸ்ரீமுருகனும் இதனாலேயே ஸ்ரீபகவானை ''மெய்விழிப்பாம் சுழுத்தியே'' என்று ஸ்ரீ ரமண புராணத்தில் (வரி 420) போற்றுகிறுர். (சுழுத்தி - சுழுப்தி, உறக்கம்). ஜாக்ரத் (நனவு) - சுழுப்தி நிலையே ஸ்ரீ பகவானின் உண்மை இருப்பு நிலை என்பது கருத்து. இந்நிலையை ''உள்ளத்து (இதயத்தில் அதாவது ஆன்மாவில்) உறங்கும் ஓர் இயல்பு'' என்று குறிக்கிறுர் ஆசிரியர். மேலும் மீனின் விழிகள் உறக்கத்திலும் மூடாது திறந்து இருக்கும். ஆகவே, இமையா முக்கண்ணனும் ஸ்ரீபகவானை கண்ணிமையா ரமணன் என்று வர்ணித்து அவருடைய விழிகளை உறங்கும் மீனின் விழிகளுக்கு ஒப்பிடுகிறுர். மேலும் தனக்குள்ளே ஆழ்ந்து தன் உண்மை சொரூபத்தை உணர்வதாலே ஆன்மநிலை அடையப் படுவதால் ''உண்ணிலவு நாட்டத்தால்'' என்றும் கூறுகிறுர். (உண்ணிலவு -உள்+நிலவு=இதயத்தின் உள்ளே நிலவும்). இவ்வாறு தன் ஜாக்ரத் சுழுப்தி நிலை உணரப்படின், செய்வன செய்து முடிக்கப்படுதலால், ஜீவன் தன் செயல்கள் அனைத்தின் மூலமாக உண்மையில் விரும்பும் ஆன்ம ஞானம் கிடைக்கப் பெறுகிறுன். ஆகவே ''எண்ணியவை எண்ணியவாறு எய்திடலாம்'' என்றுர். அத்தகைய ஆன்மஞானம் இல்லாதவர் எவ்வளவு செல்வங்களை, எத்தனை விதங்களில் பெற்றிருந்தும் வறிஞரேயாவராதலால், இத்தகைய திருக்கண்ணேக்க மகிமையை (பலனை) அடைய பகவானுடன் கண்ணேக்கமாட வேண்டுமென ஆசிரியர் அனைவரையும் அன்பொடு அழைக்கிறுர்.

பண்ணுய பணிமொழியீர் பைங்குவளைக் கண்மடவீர்
எண்ணுத எண்ணமெலாம் எண்ணலுறும் பேதைமைசேர்
பெண்ணும்எம் போலியரால் பேசவொணுப் பேருணர்வாம்
கண்ணுய ரமணனெடு கண்ணேக்கம் ஆடாமோ. ***1614***

பொ-ரை: பண்ணை ஒக்கும் மென்மொழி உடையவரே! பசுமையான குவளை மலரை ஒத்த கண்களை உடையவரே! ஆன்ம நிலையை அடைய வேண்டி எண்ணாத எண்ணங்களை எண்ணும் அகந்தை மடமையையுடைய எம்போன்ற பெண்களால் வார்த்தைகளில் வடிக்க இயலாத பேருணர்வாகிய ஆன்மாவாம் ஸ்ரீ வேங்கடரமணனொடு கண்ணேக்கமாடிக் களித்திருக்க மாட்டோமோ?

அ.ப-ரை: பண் - இனிமை, பணிமொழி - மென்மொழி, பேதமை - அறியாமை, பேருணர்வு - ஆன்மா, கண் - ஆன்மா.

வி-ரை: பேருணர்வாம் ரமணன் என்பது பேருணர்வாகிய ஆன்மாவே ஆகும்.

ஒப்பு (1):
உள்ளது உணர உணர்வு வேறின்மையால்
உள்ளது உணர்வாகும் உந்தீபற — உபதேச உந்தியார், 23.

கண்ணாய ரமணன் - "கண்" என்பது ஆன்மாவே. எனவே ஆன்மாவாகிய ரமணன் என்றார்.

ஒப்பு (2):
கண் அதுதான் அந்தமிலாக் கண் — உள்ளது நாற்பது 4.

கண்ணாகி அக்கண்ணில் கருமணியாய் அம்மணியில்
பண்ணாத பாவையாய்ப் பாவையதன் நாட்டமுமாய்
விண்ணாகி விண்மணியாய் இத்தனைக்கும் வேறாகும்
கண்ணாய ரமணனொடு கண்ணேக்கம் ஆடாமோ. ***1615***

பொ-ரை: கண்ணாகவும், அந்த கண்ணின் கருமணியாகவும், அந்தக்கருமணியில் இயல்பாய் அமைந்த பாவையாகவும், அந்தப் பாவை செலுத்தும் நாட்டமுமாகவும், மேலும் விண்ணாகவும் விண்மணியாகிய சூரியனாகவும் திகழ்ந்து, அம்மட்டுமன்றி, இவையனைத்திற்கும் வேறாக விளங்கும் ஆன்மாவாகவும் திகழும் ஸ்ரீ ரமண பகவானொடு கண்ணேக்கமாடாமோ?

அ.ப-ரை: பண்ணுத பாவை-இயல்பாய் அமைந்த பாவை (கருவிழி).

கண்ணுளர் மன்பதையின் கண்ணுகக் காண்டலுறும்
எண்ணுகி எழுத்தாகி எவற்ருனும் கண்டறிய
ஒண்ணுத இயல்பாய உண்மையறிவு ஆனந்தக்
கண்ணுய ரமணனெடு கண்ஞேக்கம் ஆடாமோ. 1616

பொ-ரை: கண் படைத்தவர்கள் மனித குலத்தின் கண்ணுகப் போற்றத் தகுந்தவர் ஸ்ரீ ரமணபிரான் ஆவார். எண்ணுகவும் எழுத்தாகவும் உருவாகியும் அவற்ருல் உருப்பெறும் எந்த மொழியாலும் கண்டறியவியலாத இயல்பையுடையவரும் மெய்ஞ்ஞானனந்த ஆன்மாவும் ஆகிய ஸ்ரீரமண பிரானெடு கண்ஞேக்கமாடோமோ?

அ.ப-ரை: கண்ணுளர்-கண்படைத்தவர், மன்பதை-மக்கட் பரப்பு (மனிதகுலம்), உண்மை அறிவானந்தக் கண் - மெய்ஞ்ஞானனந்த ஆன்மா.

கண்ணகன்மா ஞாலத்துக் கண்பெற்ற காரிகையீர்
கண்ணுய புலமொன்றே ஐயுணர்வும் கவர்ந்துகொளக்
கண்ணனெடு திண்ணனும் கண்ணியர்தம் கண்ணுக்கும்
கண்ணுய ரமணனெடு கண்ஞேக்கம் ஆடாமோ. 1617

பொ-ரை: விரைந்து செய்யப்படும் வினைகளால் நிரம்பிய உலகக்காட்சியை காணும் பெண்காள்! தன் கண்ணுகிய புலன் ஒன்றினுலேயே அடியார்களின் மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகிய ஐம்புலன்களையும் கவர்ந்து விடும் இயல்புடையவர் ஸ்ரீ ரமணபிரான்! அழகிய கண்களுக்குப் பிரசித்திபெற்ற கண்ண பரமாத்மாவிற்கும், கண்ணப்ப நாயனுருக்கும் உள்ளிருந்து ஒளிரும் ஆன்மாவாகிய ஸ்ரீ ரமணபிரானெடு கண்ஞேக்கமாடிக் களிக்க மாட்டோமோ?

அ.ப-ரை: கண்ண - விரைய (Speedily), கன்மா - வினை (கர்மா),

கண்ணியர் - கண்ணை உடையவர்கள், கண்ணகன்மா ஞாலம் - வினைகளினுல் விரைந்து இயக்கப்படும் உலகம்.

வி-ரை: உலகக்காட்சியை உண்மையென நம்புகிறவர்க்கு ஆன்மக்காட்சி தெரிவதில்லை.

ஒப்பு: யநிஶா ஸர்வபூதாநாம் தஸ்யாம் ஜாகர்த்தி ஸம்யமீ
யஸ்யாம் ஜாக்ரதி பூதானி ஸாநிஶா பஶ்யதோ முனேः
-பகவத் கீதை (2:69)

க-ரை: உயிர்களனைத்திற்கும் எது இரவோ அதில் (ஆன்மாவில்) ஞானி பூரண விழிப்புடன் இருக்கிருன். உயிர்களெல்லாம் எதில் (உலகாதி விஷயங்களான அனுத்மாக்களில்) விழித்துள்ளனவோ அது அவனுக்கு இரவாகும்.

எனவே 'உலகக் காட்சியைக் காணும் கண் படைத்தவரே' என்று அகந்தை வயப்பட்டவரை விளித்து, ஆன்மக்காட்சியைக் காணும் கண்ண பரமாத்மா, கண்ணப்பர் ஆகிய இருவரையும் உதாரணங்களாகக் குறிப்பிட்டு அவர்களுக்கே ஆன்மாவாக விளங்கும் ஸ்ரீ பகவானுெடு கண்ணேக்கமாடி ஆன்மவயப்பட அவர்களை அழைக்கிருர் ஆசிரியர்.

கண்ணகன்மா ஞாலத்தோர் கண்மாயம் காண்கெனவே
விண்ணுமண்ணும் பாதலமும் மெய்ஞ்ஞானப் பரவெளிக்குஊண்
பண்ணியருள் வாழ்வளிக்கும் பரஞான சித்தநடன்
கண்ணுதல்வேங் கடனுெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 1618

பொ-ரை: விரைந்து வினைகளை ஆற்றி அகந்தைவயப்பட்ட உலகத்தவர்காள்! நீங்கள் காணும் விண்ணுலகம், மண்ணுலகம், பாதாள உலகம் ஆகிய இவை அனைத்தையும் கண்கட்டுவித்தையாக மெய்ஞ்ஞான பரவெளிக்கு உணவாகச் செய்து ஆன்ம வாழ்வருளும் பரஞான நடனம் புரி சித்தனும் நெற்றிக்கண் படைத்த ஸ்ரீவேங்கட ரமணனுெடு கண்ணேக்கமாடிக் களித்திருக்க மாட்டோமோ?

அ.ப-ரை:கண்மாயம் - கண்கட்டு வித்தை (Optical illusion, visual trick) பரவெளிக் கூண் - பரவெளிக்கு ஊண் (உணவு).

கண்ணோடு கண்காட்சி கலக்குங்கால் காதலருள்
எண்ணாத வாய்ச்சொல்லால் ஏதுபயன் எங்கைமீர்
பண்ணாய வாய்ச்சொற்கள் பயனறவேங் கடரமணக்
கண்ணாளன் தன்னொடுநாம் கண்ணோக்கம் ஆடாமோ. *1619*

பொ-ரை: எம் குலத்தவரே! கண்ணோடு கண் இணை நோக்கின் காதலருள் வாய்ச் சொற்களால் ஒரு பயனும் இல்லை என்பதைப் போன்று, இனிமை மிகுந்த வாய்ச் சொற்கள் கூட பயனற்றுப் போகும்படிக்கு (எம் உயிருக்கு உயிராய்) கண்ணாளனாகிய ஸ்ரீ வேங்கடரமணனொடு கண்ணோக்கமாடோமோ?

ப-ரை: எங்கைமீர் - எம்குலத்தவரே!

ஒப்பு: கண்ணோடு கண்இணை நோக்கின் வாய்ச் சொற்கள்
என்ன பயனும் இல. *-குறள் 1100*

வி-ரை: திருவள்ளுவப் பெருமான் காமத்துப்பாலில் சிற்றின்பத்திற்காகப் பாடிய குறளைப் பேரின்பத்திற்குப் பயன்படுத்துகிறார் ஆசிரியர். வள்ளுவர் வழிநின்று குறள் வெண்பா புனைவதில் அதிசமர்த்தராம் ஆசிரியர் தமது பாடல்களில் திருக்குறளைப் வெகுவாகப் பயன்படுத்தியுள்ளார். மேற்கண்ட பாடலும் அத்தகையதொன்றாகும். குரு-சீடருக்கிடையில் மௌனோபதேசத்தில் வாய்ச்சொற்களுக்கு அவசியமின்றி, சக்ஷுர்தீக்ஷையே முக்கியத்துவம் பெறுகிறது. இவ்வுண்மையை ஆசிரியர் இப்பாடலில் சொல்லழகும் பொருளழகும் ஒன்றையொன்று போட்டியிட்டு வெல்லும் விதத்தில் வெளிப்படுத்துவது ரசிக்கத்தக்கது.

நோக்குஉருவாய் நோக்குள்ளே நுழைந்தானைத் தந்நோக்கால்
நோக்குறுவார் நோக்காரா நோக்காதார் நோக்குதலால்
நோக்கரிய நோக்கானை நோக்கலுறில் தடையாம்அந்
நோக்கறவேங் கடனொடுகண் ணோக்கநாம் ஆடாமோ. *1620*

பதவுரை:

நோக்குருவாய்	- பார்க்கப்படும் உருவங்களாய்
நோக்குள்ளே நுழைந்தானை	- கண்களுக்குள்ளே (பார்க்கும் சக்தியாக) நுழைந்த ஸ்ரீ பகவானை (ஆன்மாவை)
தம் நோக்கால் நோக்குறுவார்	- தாம் பெற்ற அந்த ஊனக் கண் பார்வையால் பார்ப்பவர்கள்
நோக்காரா	- பார்க்க மாட்டார்கள்
நோக்காதார்	- புறமுகப்பட்டு ஊனக் கண்களால் பார்க்காதவர்கள் (மாருக அகமுகப்பட்டு அகக்கண்ணுல் பார்ப்பவர்கள்)
நோக்குதலால்	- (தம்முள்ளாழ்ந்து) ஸ்ரீபகவானை (ஆன்மாவை) பார்ப்பதால்,
நோக்கரிய(னை)	- எவரும் எளிதில் பார்ப்பதற்கரியவனை,
நோக்கானை	- சர்வ சாக்ஷியாக அனைத்தையும் பார்ப்பவனை
நோக்கலுறில் தடையாம்	- (ஊனக்கண்களால்) பார்க்க முயற்சிப்பதே பார்ப்பதற்குத் தடையாய் முடியும்.
அந்நோக்கற	- (ஆகவே புறமுகப்பட்டு ஊனக்கண்களால்) பார்க்கும் முயற்சியைக் கைவிட்டு
வேங்கடனொடு கண்ணோக்கம்	- (அகமுகப்பட்டு நம் இதயத்தில் மூழ்கி) அகக்கண்ணுல் ஸ்ரீபகவானைக் (ஆன்மாவை) கண்டு (உணர்ந்து)
ஆடாமோ	- ஆனந்த நடனம் ஆட மாட்டோமோ (களித்திருக்க மாட்டோமோ)!

பொ-ரை: பார்க்கப்படும் உருவங்களாய் கண்களுக்குள்ளே (பார்க்கும் சக்தியாக) நுழைந்த ஸ்ரீ பகவானை (ஆன்மாவை) - தம் பெற்ற அந்த ஊனக் கண் பார்வையால் பார்ப்பவர்கள் பார்க்க மாட்டார்கள் (மாருக அகமுகப்பட்டு அகக்கண்ணுல் பார்ப்பவர்கள்) (தம்முள்ளாழ்ந்து) ஸ்ரீபகவானை (ஆன்மாவை) பார்ப்பதால், எவரும் எளிதில் பார்ப்பதற்கரியவனே, (ஊனக்கண்களால்) பார்க்க முயற்சிப்பதே பார்ப்பதற்குத் தடையாய் முடியும். (ஆகவே புறமுகப்பட்டு ஊனக்கண்களால்) பார்க்கும் முயற்சி யைக் கைவிட்டு (அகமுகப்பட்டு நம் இதயத்தில் மூழ்கி) அகக்கண்ணுல் ஸ்ரீபகவானைக் (ஆன்மாவை) கண்டு (உணர்ந்து) ஆனந்த நடனம் ஆட மாட்டோமோ (களித்திருக்க மாட்டோமோ)!

வி-ரை: கண் முதலான ஐம்புலன்களின் மூலமாக ஆன்மாவை உணர்தல் இயலாத ஒன்று என்பதனை உள்ளங்கை நெல்லிக்கனியென விளக்குவது இந்தப்பாடல். இங்கே 'கண்' அல்லது 'பார்த்தல்' (நோக்குதல்) மற்றைய நான்கு புலன்களுக்கும் ஆகுபெயராக நின்றது.

'நோக்குருவாய் நோக்குள்ளே நுழைந்தானை' என்றதாவது

பார்க்கப்படு பொருள்களாக இந்த உலகக் காட்சி தோன்றுவதற்குக் காரணம் கண்களுக்கே உரிய பார்க்கும் சக்தியே! அந்த சக்தியை கண்கள் ஆன்மாவிடமிருந்தே பெறுகின்றன. இது மற்றைய நான்கு புலன்களுக்கும் அவற்றை இயக்கும் மனத்திற்கும் பொருந்தும். எனவே ஆன்மாவாகிய ஸ்ரீபகவான் பார்க்கும் சக்தியாக மனித உடலில் புகுந்துள்ளாரென்பதையே 'நோக்குருவாய் நோக்குள்ளே (கண்களுக்குள்ளே) நுழைந்தானை' என்ருர். மேலும் பார்க்கப்படு பொருள்கள் அனைத்தும் திருசியங்களாகக் கழிவதால், அவை என்றுமே 'திருக்கு' (பார்ப்பவன்) ஆக முடியாது. ஏனெனில் பார்க்கப்படு பொருள்கள் அனைத்தும் உடைமைப் பொருள்களே! உடைமைப் பொருள்கள் என்றுமே உடையவனுக (எஜமானனுக) முடியாது. இந்த உண்மையை

ஆதி சங்கர பகவத்பாதர் 'திருக்கு திருசிய விவேகம்' நூலில் மிக விரிவாக விளக்குவதை ஆங்கே காண்க. ஆகவே ஐம்புலன்களும் அவற்றை இயக்கும் மனமும் உடைமைப் பொருள்களேயன்றி, அவை செயல்படுவதற்கு சக்தியை அளிக்கும் ஆதி புருஷனுகிய ஆன்மா அல்ல என்பது தாத்பரியமாம். உள்ளது நாற்பது 6, 7-ம் பாடல்கள் இங்கு வாசித்துணரத்தக்கன.

ஒப்பு (1):

உலகு ஐம்புலன்கள் உரு வேறன்று அவ்வைம்
புலன் ஐம்பொறிக்கும் புலனும்-உலகை மனம்
ஒன்று ஐம்பொறிவாயால் ஓர்ந்திடுதலான் மனத்தை
அன்றி உலகு உண்டோ அறை. -உள்ளது நாற்பது, 6.

பொருள்: கண்ணுல் பார்க்கப்படும் இந்த உலகம் ஐந்துவித விஷய உணர்ச்சிகளின் உருவமாகும். அவற்றிற்கு வேருனதல்ல. இந்த ஸ்பரிசம், சுவை, ஒளி, நாற்றம், ஒலி என்னும் ஐந்து உணர்ச்சிகளும் மெய், வாய், கண், மூக்கு, செவிகளாகிய ஐந்து இந்திரியங்களால் அறியப்படுகின்றன. இப்படிப்பட்ட ஐம்புலச் சேர்க்கை (Mixture) யாகிய உலகை மனம் ஒன்றே ஐந்து இந்திரியங்கள் வாயிலாக அறிந்து கொள்வதினுல், மனத்திற்கு அப்பாற்பட்டு உலகம் என்ற ஒன்று உள்ளதோ? நீயே கூறு!

மேற்கண்டப் பாடல் உலகக் காட்சியில் காணப்படும் பொருள்கள் அனைத்தும் உடைமைப் பொருள்களே என்பதை அழுத்தந்திருத்தமாக அறிவிக்கின்றது.

இனி, ஆன்மாவே உடையவன் (அனைத்திற்கும் ஆதாரம்) என்னும் உண்மையை கீழ்க்கண்ட பாடல் வலியுறுத்துகின்றது:

ஒப்பு(2):

உலகறிவு ஒன்ருய் உதித்தொடுங்கு மேனும்
உலகறிவு தன்னுல் ஒளிரும் - உலகறிவு
தோன்றி மறைதற்கு இடனுய் தோன்றி மறையாது ஒளிரும்
பூன்றமாம் அஃதே பொருள். - உள்ளது நாற்பது, 7

பொருள்: உலகக் காட்சியும் தற்போத அறிவாகிய மனமும் ஒன்ருகவே சேர்ந்து நனவில் தோன்றி உறக்கத்தில் மறையும். எனினும் உலகம் மனத்தின் அறிவினுல் பிரகாசிக்கின்றது. உறக்கத்தில் மனம் இல்லாததினுல் உலகம் தனித்துப் பிரகாசிப்பதில்லை. இவ்வாறு உலகம், அதைப் பிரகாசிக்கும் மனம் ஆகிய இரண்டும் தோன்றுவதற்கும் ஒடுங்குவதற்கும் இடம் அளித்து, தான் மட்டும் தோன்றுதல், மறைதல் ஆகிய இரண்டுமேயின்றி என்றும் நித்ய பரிபூரண வஸ்துவாய் பிரகாசிப்பது ஆன்மாவே ஆகும்.

அஃதே பொருள் - அதுவே வஸ்து (ஆன்மா).

ஒருகால் தோன்றி மறுகால் அழியும் திருசியங்கள் நாம் அல்ல; என்றுமே அழியாத ஆன்ம வஸ்துவே நாம் என்பதைத் தெரிவிக்கும் பாடல் இது.

''நோக்காதார் நோக்குதலால்'' என்றதாவது

ஊனக்கண்களால் புறமுகப்பட்டு ஆன்ம வஸ்துவைத் தரிசனம் செய்வதென்பது என்றுமே இயலாதென்பதால்அத்தகைய பயனற்ற நோக்குதலைக் கைவிட்டு, நேர்மாருக, தம்முள்ளாழ்ந்து அகமுகப்பட்டு ஆன்மாவை நாடுபவர் அதில் வெற்றி பெறுவர் என்பதைக் கூறவே ''(பயனற்ற புறமுக) நோக்காதார் நோக்குதலால்'' என்ருர். இங்கே ''நோக்குதல்'' ஆன்மாவை உணர்தல் என்று பொருள்படும்.

ஒப்பு (1): .... உதிதலம் எதுவென உள்ளாழ்ந்து
உளத்தவிசு உறின் ஒரு குடை நிழற்கோவே
-அருணுசல அஷ்டகம், 7.

பொருள்: இந்த 'நான்' என்பது எங்கிருந்து உதிக்கின்றதென்று, தம்முள்ளாழ்ந்து, அதன் மூலத்தைத் தேடி விசாரித்து அந்த மூலத்தானத்தை அடைந்தால், நம்முடைய இதய சிம்மாசனத்தில் ஒப்பற்ற தன் அருட் குடையின்கீழ் உலகனைத்தும் ஆட்சி புரியும் இறைவனே (ஆன்மாவே) நீ என்பதை அறிவாய்.

ஒப்பு (2):

நானுரென மனம் உள்நாடி உளம் நண்ணவே
நானும் அவன்தலை நாணமுற-நான்நானுத்
தோன்றும் ஒன்று தானுகத் தோன்றினு(ம்) நான்அன்றுபொருள்
பூன்றமது தானும் பொருள்.

-உள்ளது நாற்பது, 30.

பொருள்: 'நானுர்' என்னும் ஆன்ம விசாரத்தால் மனம் அகமுகப்பட்டு இதயமாகிய ஆன்மாவைச் சார்வதினுல், குறுகிய மனம் என்னும் அகந்தை தலை சாய்ந்து அழியும். அப்போது உண்மையான 'நான்' ஆகிய ஆன்மா தோன்றும். தானுக அது தோன்றினுலும் அது 'அகந்தை நான்' அல்ல; பரிபூரண ஆன்மவஸ்துவேயாகும்.

ஒப்பு (3): *நான்ஒன்று தானத்து நான்நான் என்று ஒன்றுஅது*
தானுகத் தோன்றுமே உந்தீபற
தானது பூன்றமாம் உந்தீபற

-உபதேச உந்தியார், 20.

"......நோக்கலுறில் தடையாம் அந்நோக்கற வேங்கடனெடு கண்ணேக்க நாம் ஆடாமோ" என்றதாவது

ஊனக்கண்களால் ஆன்மவஸ்துவைக் காண முயற்சிப்பது, அப்படிப்பட்ட முயற்சியை மேற்கொள்வதே "பார்ப்பான் - பார்த்தல்-பார்க்கப்படுபொருள்" என்று முப்புடிகளாக ஏகவஸ்துவாகத் திகழும் ஆன்மவஸ்துவை பின்னப்படுத்துவதால், ஆன்ம தரிசனத்தைக் காணவொட்டாமல் தடை செய்துவிடுகிறது. ஆகவே நாம் அவ்வாறு ஊனக்கண்களால் காண முயலும் முயற்சியைக் கைவிட்டு, அகமுகப்பட்டு இதயமாக விளங்கும் ஆன்ம வஸ்துவை தரிசனம் செய்து, அதனுல் ஆனந்தம் பொங்கிப் பெருகக் களிநடம் புரிவோம் என்பதை கூறவேண்டியே மேற்கண்டவாறு கூறுகிருர்.

மேலும் ஸ்ரீபகவானெடு கண்ணேக்கமாடல் என்பது ஸ்ரீபகவானை அவர் உள்ளபடிக்குத் தரிசனம் செய்தலேயாகும்.

ஸ்ரீபகவான் அவருடைய திருமேனி மட்டுமேயல்ல; அவருடைய உண்மையியல்பு ஆன்மாவேயாகும். எனவே ஆன்ம தரிசனம் செய்பவரே, அதாவது, நாம் ஆன்மாவேயென்றுத் தம்மைத் தாம் அறிபவரே ஸ்ரீபகவானை உண்மையில் கண்டவராவர். அவ்வாறு காண்பவர், அத்தகு ஆன்மத் தெளிவால் அளப்பரிய ஆன்மானந்தத்தை அனுபவிப்பர். இதை ஆனந்தத் தாண்டவம் என்பதாக ஈசுவரன் மேலேற்றிப் புராணங்கள் கூறுகின்றன. இவ்வழி நின்று ஆசிரியர் ஸ்ரீபகவானிடமிருந்து தாம் பெற்ற ஆன்ம இன்பத்தை தம் சுவாநுபூதியினுல் ''ஆடல்'' (நடனம்) என்று கூறி இந்த ஸ்ரீபகவானருளை ''கண்ணேக்கம் ஆடுதல்'' என்று பாட்டுக்குப் பாட்டு வர்ணித்தாராயிற்று.

இறுதியாக ''நோக்குருவாய் நோக்குள்ளே நுழைந்தானை'' என்னும் ஸ்ரீமுருகனுரின் ஆன்மானுபவம் கேனேபனிஷதம் கூறுவதுவேயாகும்.

ஒப்பு (1): *எதனை வார்த்தைகளால் வெளிப்படுத்த இயலாதோ, ஆனுல் எதனுல் பேசும் சக்தியை ஒருவன் பெறுகிறுனே, அதுவே பிரம்மம்.* *-பாடல் 5, பாகம் 1.*

ஒப்பு (2): *எதனை மனம் அறிய முடியாதோ, ஆனுல் எதனுல் மனம் அறியப்படுகின்றதோ அதுவே பிரம்மம்.*
-பாடல் 6, பாகம் 1.

ஒப்பு (3): *எதனை கண்கள் பார்க்க இயலாதோ, ஆனுல் எதனுல் கண்கள் பார்க்கும் சக்தியைப் பெறுகின்றனவோ, அதுவே பிரம்மம்.* *- பாடல் 7, பாகம் 1.*

ஒப்பு (4): *எதனை காதுகள் கேட்கவியலாதோ, ஆனுல் எதனுல் காதுகள் கேட்கும் சக்தியைப் பெறுகின்றனவோ அதுவே பிரம்மம்.* *- பாடல் 8, பாகம் 1.*

ஒப்பு (5): *எதனை மூக்கு நுகரமுடியாதோ, ஆனுல் எதனுல் மூக்கு நுகரும் சக்தியைப் பெறுகின்றதோ அதுவே பிரம்மம்.*
- பாடல் 9, பாகம் 1.

ஆன்மாவை ஐம்புலன்களும் மனமும் நெருங்க முடியாதென்பதை கேனோபனிஷதம் திட்டவட்டமாகத் தெரிவிக்கின்றது. ஆனால் இவற்றால் அறிய முடியாவிட்டாலும் ஆன்மா இல்லையென்பதாகாது; அது பரம ஆதார சக்தியாக இருக்கின்றது என்னும் கேனோபனிஷத உண்மையினை ஸ்ரீமுருகனார் சுவாநுபூதியில் உறுதி செய்கிறார். இந்த உண்மையினை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை கூறும் ஸ்ரீ முருகனாரின் பாடல்களைக் கீழே காண்க:

ஒப்பு (1):

எதனாலே காணும்கண் அதுஎதனைக் காணாதோ
எதனாலே கேட்குங்காது அதுஎதனைக் கேளாதோ
எதனாலே உண்ணும்வாய் அதுஎதனை உண்ணாதோ
அதுதானே ரமணப்பேர் அம்மான் கண்டீர்.

- ஸ்ரீ ரமணசந்நிதிமுறை, 1131

ஒப்பு (2):

எதனாலே உஞற்றும்உடம்பு அதுஎதனை உஞற்றாதோ
எதனாலே இசைக்கும்வாய் அதுஎதனை இசைக்காதோ
எதனாலே எண்ணும்மனம் அதுஎதனை எண்ணாதோ
அதுதானே ரமணப்பேர் அம்மான் கண்டீர்.

உஞற்றுதல் - முயற்சித்தல் *- ஸ்ரீ ரமணசந்நிதிமுறை, 1132*

ஒப்பு (3):

காட்டா வதனைக் காண்பித்தும்
கேளா வதனைக் கேட்பித்தும்
ஆட்டான் கொண்ட வேங்கடன்தன்

-ஸ்ரீரமண சந்நிதி முறை, 747.

பொருள்: கண்ணால் காண முடியாத ஆன்மாவைக் காண வைத்தும், காதால் கேட்க முடியாத ஆன்மாவைக் கேட்க வைத்தும் ஸ்ரீபகவான் என்னை ஆட்கொண்டார்.

ஒப்பு (4):

பூணொணாத நின்போதமேற்படப் போந்தபோழ்தில் என்கண்புலம்
காணொணாதகண்காட்சி பற்பலகாட்டினாய் மனக்கண்ணு(ள்)ளே.
-காட்சிப் பதிகம், 10, ஸ்ரீரமண சந்நிதிமுறை

பொருள்: எளிதில் அடைய இயலாத ஆன்ம ஞானபோதம் (*Experiential knowledge of Self*) என்னுள் ஏற்பட்டபோது கண்முதலாய ஐம்புலன்களால் உணர முடியாத ஆன்மாவை எனக்கு தரிசனப்படுத்தினீர்!

பாட்டுக்குப் பாட்டு ஆன்ம தரிசனத்தை ஸ்ரீபகவான் செய்வித்தாரென்று ஸ்ரீமுருகனார் கூறும் "காட்சிப் பதிகம் (ஸ்ரீரமண சந்நிதிமுறை) இங்கு வாசித்துணரத்தக்கது. ஆகவே ஸ்ரீமுருகனார் ஸ்ரீபகவானோடு கண்ணோக்கமாடிப் பெற்ற ஆன்மக் காட்சியை விவரிக்கும் "காட்சிப் பதிகம்" இந்நூலில் பிற்பகுதியாக இணைக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு ஸ்ரீபகவானருளால் உபனிஷத வாக்கிய சொரூபராக ஏற்றம் பெற்ற ஸ்ரீமுருகனார் அந்த சுவாநுபூதியில் ஸ்ரீபகவானோடு கண்ணோக்கமாடியும், அந்த அனுபவத்தை "திருக்கண்ணோக்கம்" என்று பாடியும் மகிழ்ந்தது மனிதகுலம் செய்த தவப்பயனே!

மீட்சியே இல்லாத வீட்டின்ப வேட்கையுடைப்
பூட்சியீர் செங்கமலப் பொன்னனையீர் வீட்டுலக
ஆட்சியான் வேங்கடவன் அந்தமிலா மெய்ஞ்ஞானக்
காட்சியான் தன்னொடுநாம் கண்ணோக்கம் ஆடாமோ. **1621**

பொ-ரை: ஆன்மவீட்டின்பம் வேண்டுமென்னும் ஆர்வத்தினின்று மறுபடியும் திரும்புதல் என்பதேயில்லாத உறுதியான கொள்கையை உடையவர்களே! சிவந்த தாமரை மலரைப் போன்ற அழகுடையவர்களே! ஆன்ம வீட்டை ஆளுபவனும், முடிவற்ற மெய்ஞ்ஞானக் காட்சியாக விளங்குபவனும் ஆகிய வேங்கட ரமணனொடு நாம் கண்ணோக்கம் ஆடாமோ?

மீட்சி-திரும்புதல் (to return to) பூட்சி-கொள்கை, பொன்-அழகு.

அவிச்சைஇருட் படலத்துக்கு ஆதித்தன் தன்அடியார்
தவிச்சதவிப்பெல்லாம் தணிப்புற்ற தண்ணளியான்
கவிச்சமுழு மதிக்குடைவேங் கடனெடுஅன னியநோக்கால்
அவிச்சின்னமாய் அடியீர் கண்ணேக்கம் ஆடாமோ. ***1622***

பொ-ரை: மெய்யடியீர்! அறியாமை என்னும் இருட்டிற்கு சூரியனுக மிகுந்த வெப்பத்தையுடைய ஸ்ரீ பகவான்தன்னுடைய அடியார் அகந்தையில் தவிக்கும் துன்பத்தைத் தணிக்கும் மிகுந்த குளிர்மையை உடையவனுக உள்ளான். பூர்ண சந்திரனே மகுடமாகச் சூடிய ஸ்ரீ வேங்கடரமணனெடு 'பக்தன் வேறு - பரமன் வேறு', என்னும் அன்னிய பாவம் முற்றிலும் அழிந்து, இருப்பது ஒன்றே என்னும் அனனிய நோக்கால் இடைவிடாது கண்ணேக்கம் ஆடாமோ!

அ.ப-ரை: *அவிச்சை - அறியாமை, கவிச்ச - வளைந்து மூடுதல் (to invest with as a crown) (சூடுதல்) கவிச்ச முழுமதிக்குடை - பூர்ண சந்திரனே குடைபோன்று முழுதாக வளைத்துச் சூட்டுதல், அவிச்சின்னம் - இடைவிடாது (Uninterrupted).*

வி-ரை: அனனிய நோக்கு - பரமன் வேறு, பக்தன் வேறு என்னும் பேதபாவம் நீங்கி, ஏகவஸ்துவாகத் தன்னே உணர்ந்து பக்தி செய்தல் ''அனனிய பக்தி'' அல்லது 'பரபக்தி' எனப்படும்.

ஒப்பு (1): *அனிய பாவத்தில் அவன் அகமாகும்*
அனனிய பாவமே உந்தீபற
அனைத்தினும் உத்தமம் உந்தீபற.

- உபதேச உந்தியார், 8

ஒப்பு (2): *சற்பாவத்தில் இருத்தலே உந்தீபற*
பரபக்தி தத்துவம் உந்தீபற. - உபதேச உந்தியார், 9

கருத்து: அனனிய பாவம் திடப்பட்டு அதில் நிலை பெறலே பரபக்தியின் தத்துவார்த்தம் ஆகும்.

இவ்வாறு பரபக்தி பயில இயலுமா என்னும் ஐயம் அடியார்க்குச் சற்றும் எழாதபடிக்கு ஸ்ரீபகவான் தம்மை ஏகவஸ்துவாக உணர்ந்த நிலையில் அருணாசலேசுவரனுக்கு பரமபக்தராய் வாழ்ந்து காண்பித்தார். இப்பரபக்தி தாம் பயின்று, அதன் படி செயலில் வாழ்ந்து காண்பித்தே பிறர்க்குப் புரிய வைக்கக் கூடுமாதலால் ஈசுவரன் நந்திகேசுவரப் பெருமானை "பயின்று ஒழுகிக் காட்டுக" என்று ஆணையிட்டார். இதை ஸ்ரீ முருகனார் தாமியற்றிய ஸ்ரீ ரமண புராணத்தில் குறிப்பிடுவதை கீழே காண்க:

ஒப்பு: ஓங்கு பரபக்தி உருத்தெரியப் பக்குவர்க்குப்
பாங்கு பெற நீ போய் பயின்று ஒழுகி காட்டுகென
ஆருயிர் மாட்டு இன்ப அருள் ஆற்றல் ஒன்றே தன்
காரியமாக் கொண்ட அக்கண்ணுதலோன் கூற

-ரமண புராணம், வரிகள் 13-16

ஏவலிடை நின்றெழுகும் எங்கைமீர் கண்ணொளியும்
தாவலறு கதிரொளியும் சார்வதுபோல் சங்கையறச்
சீவபரமா ஆன்மாக்கள் சேர்ந்திடவேங் கடரமணக்
காவலனொடு ஒன்றுகக் கண்ணேக்கம் ஆடாமோ. 1623

பொ-ரை: ஸ்ரீபகவானின் பணியில் நின்றொழுகும் எம்குலத்தவரே! உலகுயிர்களின் வருத்தத்தைப் போக்கும் கதிரவனின் ஒளியும் கண்களின் ஒளியும் எவ்வாறு முழுக்க முழுக்கக் கலந்து ஒன்றுபடுமோ அவ்வாறு சந்தேகத்திற்குச் சிறிதும் இடமின்றி ஜீவாத்மாக்களாகிய நாம் பரமாத்மாவொடு ஒன்று கலந்திட நம் காவலனாகிய ஸ்ரீ வேங்கட ரமணனொடு ஒன்றுபட்டு கண்ணேக்கம் ஆடாமோ!

அ.ப-ரை: ஏவல்-பணி (Service), தாவல்-வருத்தம், சங்கை-ஐயம்.

கலாநிதிவேங் கடரமணன் கண்ணுதித்த கலாநுபவம்
அலாதுபிறிது ஓர்நுகர்ச்சி அணுத்துணையும் அறியாதீர்
நிலாமுகிபோல் சீரியநன் நீர்மையீர் நீக்கமிலாக்
கலாமதிமா முகனொடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 1624

பொ-ரை: கலாநிதியாகிய வேங்கட ரமண பகவானின் கண்களிலிருந்து உதிக்கும் ஆன்ம கலையின் அனுபவத்தையன்றி மற்றைய எந்த ஒரு அனுபவத்தையும் ஒரு சிறிதும் அனுபவிக்காத மனத்தை உடையவர்களே! சந்திரனின் குளிர்ந்த கிரணங்களை உணவாகக் கொண்டு வாழும் பறவையைப் போல் சிறந்த அழகுடையவர்களே! ஏற்ற இறக்கமின்றித் திகழும் பூர்ண சந்திரனையொத்த முகத்தையுடைய ஸ்ரீ வேங்கட ரமணனொடு நாம் கண்ணேக்கம் ஆடாமோ!

அ.ப-ரை: நுகர்ச்சி - அனுபவம், நிலாமுகி - சந்திரனுடைய கிரணங்களை புசித்து உயிர் வாழும் ஒருவகைப் பறவை, நீர்மை - அழகு, கலாநிதி - கல்விக் களஞ்சியம் (*Treasure House of learning*), கலை - சந்திரனின் பதினாறு அம்சத்துள் ஒன்று, கலாமதி - சந்திரன், நீக்கமிலா கலாநிதி - பூர்ண சந்திரன்.

கடிகமழ்பூங் குவளையிடைக் கமலம்அக் கமலமெனும்
தடமலர்வாய்க் குவளைகளும் தாமழகாப் பூத்திடவே
மடவரலீர் வாள்விழியால் மயக்கறுக்கும் மாதவவேங்
கடரமணன் தன்னொடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. *1625*

பொ-ரை: பெண்காள்! நறுமணம் நிறைந்த பூங்குவளை மலர்களுக்கிடையே தாமரைமலர்களும், அந்த தாமரை மலர்களுக்கிடையே குவளை மலர்களும் மிக அழகாகப் பூத்துக் குலுங்கும் இனிமையான சூழலில் மிகக் கூர்மையான வீரவாள் விழி நோக்கால் அகந்தை மயக்கறுக்கும் மகா தபஸ்வியாகிய ஸ்ரீ வேங்கட ரமணனொடு நாம் கண்ணேக்கம் ஆடாமோ!

அ.ப-ரை: கடி - மணம், மடவரலீர் - பெண்காள்.

தள்ளாதே வேதியரும் தாங்கொள்ளத் தக்கதுகாண்
எள்ளாதே உள்ளினும்பே ரின்பமொடு சற்றுமுளம்
கொள்ளாதே நோக்கினும்உட் கொள்ளாத உவகைதரும்
கள்ளாய ரமணனொடு கண்ணேக்கம் ஆடாமோ. *1626*

பொ-ரை: வேதத்தில் தலைசிறந்த அந்தணரும் தள்ளிவிட முடியாத ஆன்மத் தேனாக இனிப்பவர் ஸ்ரீ பகவான் என்பதை அறிவீர்! அலட்சியம் செய்யாமல் நினைப்பின் பேரின்பம் தருவது ஸ்ரீ பகவான் அளிக்கும் ஆன்ம நினைப்பு ஆகும். மனத்தில் சிறிதும் ஈடுபாடின்றி ஸ்ரீ பகவானைப் பார்த்தாலும் கூட, பெருத்த அளவில் மனங்கொள்ளாத ஆனந்தத்தை அளிக்கும் தேனாகிய ஸ்ரீ பகவானோடு நாம் கண்ணோக்கமாடாமோ!

அ.ப-ரை: எள்ளாதே-அலட்சியம் செய்யாமல் உள்ளுதல்-நினைத்தல், உவகை-ஆனந்தம், கள் - தேன்.

செத்தாலே திறப்படுவோம் செத்தாலோ பிறந்திடுவோம்
எத்தாலே வாழ்ந்திடுவோம் எனக்கருதி ஏமாப்பீர்
இத்தாலே வாழ்ந்திடலாம் எங்கள்வேங் கடரமணக்
கத்தாவோடு ஒருமுகமாய்க் கண்ணோக்கம் ஆடாமோ. 1627

பொ-ரை:அகந்தை இறந்தாலே நன்மை அடைவோம். மாறாக உடல் மட்டும் மரித்தால், மீண்டும் பிறந்திடுவோம். ஜனன மரணங்களைக் கடந்த பேரின்பப் பெருவாழ்வை எவ்வாறு அடைய முடியும் என்று பெரிய எதிர்பார்ப்புகளோடு மனக்கோட்டை கட்டுபவர்களே! எங்கள் வேங்கட ரமணனோடு கண்ணோக்கம் ஆடுதல் என்னும் இந்த உபாயத்தினால் எந்நாளும் சிரஞ்சீவிகளாக வாழ்ந்திடலாம் என்னும் உண்மையை அறிந்தபின் கர்த்தாவான அவனோடு நாம் கருவிகளே என்று உணர்ந்து, ஒருமுகப்பட்டு ஏகசிந்தனையுடன் கண்ணோக்கமாடோமோ!

அ.ப-ரை: ஏமாப்பு - பெரிய எதிர்ப்பார்ப்புகளோடு மனக்கோட்டை கட்டுதல், ஒருமுகமாய் - ஒரே சிந்தனையாய்.

காக்கையிரு கண்களுக்கு மணியொன்றே கலந்தாற்போல்
தாக்குமிரு நிலையினுக்கும் சார்கரியாய் என்னிதயச்
சேக்கையிடை உறைரமணன் சிறப்பெய்தக் காரண்டம்
காக்கைக்குத் தோன்றலொடு கண்ணோக்கம் ஆடாமோ. 1628

பொ-ரை: காக்கையின் இருகண்களுக்கும் கருமணி ஒன்றே இருப்பதைப் போல், ஜீவரைத் தாக்கும் நித்திரை, விழிப்பு ஆகிய இரண்டு நிலைகளுக்கும் சாக்ஷியாக விளங்குபவனும், என் இதய பீடத்தில் உறைபவனும், பிரம்மாண்டமான பூமி முதலான அண்டங்களை சிறந்த முறையில் காப்பாற்றுவதற்காகத் தோன்றியவனும் ஆகிய ஸ்ரீபகவானொடு கண்ணோக்கமாடாமோ!

அ.ப-ரை: மணி - கண்ணின் கருமணி, கரி - சாக்ஷி, சேக்கை - பீடம், கார் - பெரிய, அண்டம் - கோள், காக்கைக்கு - காப்பாற்றுவதற்கு, தோன்றல் - தோன்றுதல், தோன்றியவர்.

அங்கலாய்ப் புற்ற அடியோம் உயிர்ப்பயிரை
மங்குலாய்க் காத்தவருள் மார்த்தாண்ட வேங்கடன்பால்
கொங்குலாம் கார்க்குழலீர் குவிந்தஇத யத்துளைசேர்
கங்குலாம் அவிச்சைகெடக் கண்ணோக்கம் ஆடாமோ. 1629

பொ-ரை: பெண்காள்! அகந்தையினால் அங்கலாய்ப்புற்று, துன்புற்ற பயிராகிய அடியார்களாகிய எங்களை மேகம் போல் தன் அருளாகிய நீரைப் பொழிந்து காப்பாற்றிய சூரியனும் ஸ்ரீ வேங்கட ரமணனொடு, இதயத்தில் சேர்ந்து விட்ட அறியாமை இருள் விலகும்படி கண்ணோக்கமாடாமோ!

அ.ப-ரை: மங்குல் - மேகம், கங்குல் - இருள், கொங்குலாங் கார்குழலீர் - பெண்காள், இதயத்துளை-அகந்தைத்துளை (அகந்தை முடிச்சு).

வி-ரை: 'இதயத்துளை' என்றதாவது

இங்கே பௌதீக இதயத்தைப் பற்றிப் பேசப்படவில்லை. பௌதீக இதயம் மார்பின் இடது பக்கத்தில் உள்ளது. ஆனால் இந்தப் பாடலில் கூறப்பட்டிருப்பதோ, ஆன்மஞான இதயம்; இது மார்பின் வலது பக்கத்தில் ஆம்பல் அரும்புபோல உள்ளதாக ஸ்ரீபகவான் உள்ளது நாற்பது அனுபந்தத்தில் அருளியுள்ளார்.

ஒப்பு(1): *ஒருபொருள் ஆம்பல் அரும்பென உள்ளே*
இருவிரல் வலத்தே இருப்பது இதயம்.
-உள்ளது நாற்பது அனுபந்தம், 18.

மேலும், அந்த ஞான இதயத்தின் வாய்ப்புறம் குவிந்து உள்ளது; குவியுமிடத்தேயுள்ள சிறுதுளையில் அடர்ந்த இருளாக அறியாமை என்னும் அகந்தை அமர்ந்து இருக்கின்றது. அதனை ஆச்ரயித்தே உடலின் எல்லா பெரிய நாடிகளும் இணைந்துள்ளன. அதுவே பிராண வாயு, மனம், அறிவின் ஒளி ஆகியவற்றின் இருப்பிடமாகும்.

ஒப்பு(2): *அதன்முகம் இகல்உளது அகம்உள சிறுதுளை*
அதனில் ஆசாதியொடு அமர்ந்துஉளது இரும்தமம்
அதனை ஆசிரித்துஉள அகில மா நாடிகள்
அதுவளி மனதுஒளி அவற்றின் இருப்பிடம்.
-உள்ளது நாற்பது அனுபந்தம், 19.

அ.ப-ரை: முகம்-வாய்ப்புறம், இகல் உளது-குவிந்து உள்ளது, அகம்உள சிறுதுளை-சிறுதுளை போன்ற உள்வெளி, ஆசாதியொடு-ஆசைகளோடு (அகந்தையொடு), இரும்-பெரிய, தமம்-இருள், அகிலமாநாடிகள்-அனைத்து பெரிய நாடிகள், வளி-பிராணவாயு மனம்-அகந்தை, ஒளி-அறிவு ஒளி.

எனவே மேற்கூறப்பட்ட ஞான இதயத்தை ஜீவன் அனுபவிக்கவொட்டாமல் தடுப்பது அகந்தை இருள் சூழ்ந்த அதன் வாய்ப்புறமேயாகும். ஞானத்தினுல் அந்த வாய்ப்புறம் விரிந்து அகந்தை அழிக்கப்பட்டவுடன் ஜீவன் அந்த ஞான இதயத்துள் புகுந்து, அதனெடு ஒன்று கலந்து ஜீவன்முக்தனுகிருன். இதையே ஒரு பிரார்த்தனையாக ஸ்ரீபகவான் அக்ஷரமணமாலையிலும் வைத்தார்.

ஒப்பு:

சித்தம்குளிர கதிர் அத்தம்வைத்து அமுதவாயைத்
திற அருண்மதி அருணுசலா *-பாடல் 29*

பொருள்: அகந்தையினுல் மிகவும் நொந்து பரிதவிக்கும் சித்தத்தின் தாபம் தணிந்து, அது குளிர்மையடையும்படி, உன் அமிர்தமயமான கதிர்களாகிய கரங்களைக் கொண்டு மூடிக்கிடக்கும் இதயத்தின் வாய்ப்புறத்தை திறப்பித்தருள்வாய் அருணுசலா!

ஆகவே இந்தப் பாடலில் 'இதயத்துளை' என்றது இதயக் கிரந்தியையேயாகும். இது 'அகந்தை முடிச்சு' என்றும் அழைக்கப்படுகிறது. ஆன்ம ஞான இதயத்தில் சிறு துளையாக உள்ள அகந்தை இருள் அகன்றுபோகும்படிக்கு "நாம் ஸ்ரீபகவாஞெடு கண்ணேக்கம் ஆடாமோ?" என்று சுவாநுபூதியில் கூறுகிருர் ஆசிரியர்.

உருளாயம் போல் ஓவாது உருண்டு உருண்டுஇவ் உலகத்து
மருளால் பிறந்திறக்கும் மாணு மனத்தேனைத்
தெருளாளனு நெஞ்சம் திறப்பித்த வேங்கடப்பேர்
அருளாளன் கண்ணெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 1630

பொ-ரை: சூதாட்டத்தில் பெறப்படும் ஆதாயத்தைப் போல இந்த உலக வாழ்வெனும் சூதாட்ட மயக்கத்தில் மீண்டும் மீண்டும் நீங்காது முடிவின்றி 'பிறத்தல் இறத்தல்' என்பது மாளாத அகந்தை மனத்தை உடைய என்னை ஆன்ம தெளிவு பெற்றவனுக என் நெஞ்சத்தைத் திறந்து வைத்த வேங்கட ஸ்ரீரமணப் பேரருளாளனெடு கண்ணேக்கமாடி களிக்க மாட்டோமோ!

அ.ப-ரை: உருளாயம் - சூதாட்டில் கிடைக்கும் ஆதாயம், தெருள் - ஆன்ம அறிவினுல் ஏற்படும் தெளிவு, ஓவாது - நீங்காது (முடிவின்றி) உருளாயம் போலோவாது - உருளாயம் போல் + ஓவாது, ஓவாது - அழிந்துப்போகாது.

வி-ரை: சூதாட்டத்தில் முதலில் கிடைக்கும் ஆதாயமே மனிதனை மீண்டும் மீண்டும் அதில் ஈடுபடுத்தி, இறுதியில் முழுவதுமாக அழித்து விடும் உண்மையை 'உருளாயம் போல் ஓவாது' என்பதனுல் குறித்தார். சூதாட்டத்தினுல் பெறப்படும்

ஆதாயம், 'உண்மையில் ஆதாயமே அல்ல; அழிவே' என்பது கருத்து ஆகும்.

ஈட்டியவல் வினையால்நான் இடைந்துபடாது அவ்வினையை
வீட்டியவேங் கடப்பெம்மான் விளைந்தேன்போல் என்தலைமேல்
சூட்டியபூந் தாளான்தன் சொரூபத்தைக் குருடற்கும்
காட்டியபூம் கண்ணொடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 1631

பொ-ரை: சேர்த்து வைத்த முன்வினைப் பயன்களினால் நான் துன்புறாதவாறு அந்த வினைகளை மாய்த்த ஸ்ரீ வேங்கட ரமணப் பெருமான், என்னை மிக்கத் தகுதியுடையவனாகக் கருதி என்தலை மீது தன் திருத்தாள்களைச் சூட்டினான்; அம்மட்டோடு நில்லாது, தன் ஆன்ம சொரூபத்தை அகந்தைவயப்பட்ட இந்த குருடனுக்கும் காட்டினான். அத்தகைய பூங்கண்ணாளனொடு நாம் கண்ணேக்க மாடாமோ!

அ.ப-ரை: இடைந்து படாது - துன்புறாது, விளைந்தேன் போல் - மிக்க தகுதியுடையவன் போல்.

வி-ரை: ஸ்ரீ பகவான் திருச்சுழியில் அவதரித்த போது, உடன் இருந்த கண் தெரியாத மூதாட்டி ஜோதி தரிசனம் செய்தார். அவ்வாறு ஸ்ரீ பகவான் தன் ஆன்ம ஜோதி தரிசனம் தந்ததை ''குருடற்கும் காட்டிய'' எனக் குறிப்பிடுகிறார் என்றாலும் பொருந்தும்.

நகநோக்கி நம்மைவெந் நரகத்துள் ஆழ்த்தும்பாழ்
முகநோக்கால் வெளிநோக்கி மோகத்துள் மூழ்காதே
தகநோக்கி நம்மைத் தடுத்தாண்ட வேங்கடனோடு
அகநோக்கால் அகமகிழக் கண்ணேக்கம் ஆடாமோ. 1632

பொ-ரை: புறமுகப்படுவதினால் உலகவிவகாரங்களில் ஈடுபட்டு காம, மோக, குரோத, லோப, மத, மாச்சரியம் ஆகிய அறுவகை பகைவரிடம் சிக்கி, அகந்தை மயக்கத்தில் ஆழ்ந்து, ஊரார் நம்மைப் பார்த்து எள்ளிநகையாடும் படிக்கு துன்பம் நிறைந்த நரகத்தில் மூழ்க நேரிடும். ஆனால் நாம் அவ்வாறு திசை தவறிப் போகாமல், தக்கவாறு நம்மீது தன்

அருட்கண்ணேக்கத்தைச் செலுத்தி, தடுத்தாட்கொண்ட ஸ்ரீ வேங்கட ரமணபிரானெடு, அகமுகப்பட்டு, உள்ளாழ்ந்து, இன்பம் பொங்க, மகிழ்ந்து நாம் கண்ணேக்கம் ஆடாமோ!

அ.ப-ரை: நகநோக்கி-பிறர் நகைக்கும்படி. வெளிநோக்கி - புறமுகப்பட்டு, தகநோக்கி - தக்கவாறு தம் அருட் கண்ணேக்கத்தைச் செலுத்தி, அகநோக்கால் - உள் நிலவு நாட்டத்தால், அக மகிழ - இதயத்தில் ஆன்ம இன்பம் பொங்க, அதில் மகிழ்ந்து.

வி-ரை: அறிவுச்சுடரை ஏற்றும் பாடல்களில் இதுவும் ஒன்று.

'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தலரிது', என்ருர் ஔவை மூதாட்டியார். பெறற்கரிய மானிடப் பிறவியைச் சிறந்த முறையில் பயன்படுத்திக் கொள்ள வகை செய்யும் பாடல் இது ஆகும். புறமுகப்படுதலின் பயனின்மையும் அகமுகப்படுதலின் மேன்மையையும் பிறந்த ஒவ்வொருவரும் அவசியம் தெரிந்து கொள்ள வேண்டும். புறமுகப்படுவதிஞல் ஏற்படும் கொடிய விளைவுகளை ரமண புராணத்தில் ஆசிரியர் விவரிக்கிருர். மேலும் புறமுகப்பட்டு வெளிவிஷயங்களில் மனத்தைப் பறிகொடுத்தத் தம்மை அகமுகப்படுத்தி ஸ்ரீ பகவான் ஆட்கொண்டதையும் கூறுகிருர்.

ஒப்பு(1):

அறியாமை என்னும் அவ்வாவரணம் தன்னுள்
வெறியாடு மேதினியை விக்கேப சக்தி
உளத்து உண்மை தோன்ருது ஒருங்கிருண்ட தாலே
வெளித்தன்மை எவ்வணமோ மெய்யும் அது வென்னப்
புலஞகக் காட்டலும் என் புந்தி மயக்குற்று நலஞகும்
என்று அதனை நாடலும் அந்நாட்டம் ஆவாவாய்
பரிணமித்து என் ஆருயிர்க்கு எஞ்ஞான்றும்
தவா அப் பிறப்பினும் வித்தாய்ச் சலம் செய்
பிறவியாம் பொல்லாப் பெருமரத்தைத் தோற்ற
மறவியான் மற்றும் அம்மரத்து ஒரு புள்ளாகி

இருவினையாற் சிந்தையழிந்து எம்மருங்கு நோக்கித்
தெருமரலாற் காய்கனியைத் தின்று தின்று வீணே
மறித்து மறித்து இன்ப துன்பம் ஆருது துய்த்து
வெறுத்து மனத்து ஒன்றும் விளங்காநிலைக்கண்
அவத்தமே நாயேன் அழிந்துபடா வாற்ருல்
உவத்தல் உவர்த்தல் அறு உண்மை அருளாலே
அருணை நகர் தன்னில் ஓர் அந்தணனாய்த் தோன்றிக்
கருணை விழியாற் தன் கமல பதங்காட்டி
அமைதிபெறச் சிந்தை அறிவானந்தத் தேனை
அமைவற எப்போதும் பில்கு ஆருயிர்க்கோமானே.

- ரமண புராணம் வரிகள் 235 - 254.

பொ-ரை:அறியாமை என்னும் தமோகுண ஆவரணத்திரை என் சொந்த சுபாவமான ஆன்மாவை மறைக்கவும், அந்த மறைப்பினுல் என் உள்ளத்தில் உள்ள உண்மைப்பொருள் எனக்கு புலப்படாது இருட்டடிப்பு செய்யப்பட்டது. அதனுல் காம, குரோத, மோகாதி ஆசாபாசங்கள் வெறியாட்டம் போடுகின்ற இந்த உலகத்தை, எப்பொழுதும் மனத்தைப் புறமுகப்படுத்தி வெளியே ஐம்புலன்களின் மூலமாகப் பாய்ந்து ஓடச் செய்யும் ரஜோகுண விக்ஷேப சக்தியின் இயல்பாலே அவ்வுலகப் புறத்தோற்றம் எவ்வாறு தென்படுகிறதோ அதுவே மிக நிச்சயமான உண்மை என்று ஐம்புலன்கள் காண்பித்துக் கொடுக்க, அறிவு ஒளியாகப் பிரகாசிக்கும் நான் அறிவு மயக்கத்தை அடைந்தேன். அந்த அறிவு மயக்கத்திஞல் என் நலமும் சுகமும் உலகாதி வெளி விஷயங்களில் உள்ளனவென்று நம்பி, அவ்வுலகாதி சுகங்களை நாடினேன். அவ்வாறு நாடியவுடன் என்னுடைய எண்ணங்கள் ஆசைகளாக மாற்றப்பட்டு, தனித்துவப்பட்ட ஜீவத்துவம் உருவாகி, எப்போதும் தப்பாது ஜனன மரணத்தைத் தரும் அகந்தையாகிய விதை என்னுள்ளே விதைக்கப்பட்டது. இந்த விதை பின்பு வஞ்சனை செய்யும் பிறவிச்சுழல் என்னும் பெருமரத்தைத் தோற்றுவித்தது. அறிவு மயக்கமுற்ற நான் என்

செ ந்த ஆன்ம இயல்பை மறந்ததினுல் பற்பல பிறவிகளை மீ டும் மீண்டும் எடுத்து, அப்பிறவிப் பெருமரத்தில் ஒரு பறவையாகிப் போனேன். அறிவு மயக்கத்தால், அந்தப் பறவை காய்(தீமை), பழம்(நன்மை) ஆகியவற்றை மீண்டும் மீண்டும் உண்பது போல், நன்மை, தீமை ஆகிய இருவினைகளையும் செய்து, என் சிந்தை அழிந்து, மேற்கொண்டு செய்வதறியாமல் மயங்கி, . எல்லா திசைகளையும் வெறித்து நோக்கி, மனக்கலக்கத்தால் வேறுவழியின்றி இன்ப, துன்பங்களைத் திரும்பத் திரும்பத் தவருது வீணுக்கு அனுபவித்தேன். அதனுல் மனம் வெறுத்து செய்வகையற்றுப் பயனற்றுப் போய்விட்ட நான் முற்றிலும் அழிந்து விடாதபடிக்கு, விருப்பு, வெறுப்பாதிகள் அறவே அற்ற தன் உண்மை அருளால் திருவண்ணுமலையில் ஓர் அந்தணுய் எழுந்தருளி, கருணைக் கடைக்கண்ணேக்கால் தன் தாமரைப் பாதங்களை எனக்குத் தரிசனம் செய்வித்து, சிந்தையழிந்து வெறுமைப்பட்டுப் போன என் மனம் அமைதியடையும்படி அகமுகப்படுத்தி, தன் அறிவார்ந்த உப்தேசங்களாகியத் தேனை எப்போதும் முடிவின்றி தொடர்ந்துத் துளித்துளியாக வெளிப்படுத்தி, தன்னை பிரிந்து சென்ற என் ஆருயிரை மீண்டும் தன்னேடு சேர்த்துக் கொண்ட என் ஆருயிர்க்கு அரசனே!

அ.ப-ரை: அறியாமை - அஞ்ஞானம் (*Ignorance*), ஆவரணம் - மறைப்பு, மேதினி - உலகம், விக்கேப - விக்ஷேப, புந்தி - புத்தி, தவா - தவருது, சலம் - வஞ்சனை, புள் - பறவை, அவத்தம் - பயனற்றத்தன்மை, உவத்தல் - விருப்பு, உவர்த்தல் - வெறுப்பு, பில்குதல் - துளித்துளியாக வெளிப்படுதல்.

மேற்கூறப்பட்ட அனைத்து உண்மைகளையும் இப்பாடலில் (1632) சுருங்கக் கூறி விளங்க வைக்கும் ஆசிரியர் திறம் ரசித்து மகிழத்தக்கது. புறமுகப்படுவதினுல் மோகத்தில் மூழ்கி ஊரார் நகைப்பிற்கிடனுகி சிறுமைப் படுவதைக் கூறும் ஆசிரியர் ஸ்ரீ பகவானின் அறிவார்ந்த உபதேசங்களாகியத் தேனைப் பருகி

அகமுகப்படுவதினுல் தன்னுள்ளே பொங்கும் ஆன்ம பரவசத்தை சாதகர் அனுபவிப்பதை தன் சுவானுபூதியில் உணர்ந்து ''அகநோக்கால் அக(ம்) மகிழக் கண்ணேக்கம் ஆடாமோ'' என்கிருர்.

ஒப்பு(2):

அவா என்ப எல்லா உயிர்க்கும் எஞ்ஞான்றும்
தவாஅப் பிறப்பு ஈனும் வித்து. - *குறள் 361.*

பொ-ரை: எல்லா உயிர்கட்கும் எப்போதும் ஒழியாது பிறவியைத் தரும் விதை, அவ்வுயிர்கள் உலகப் பொருள்கள் மீது வைக்கும் ஆசையேயாகும்.

அ.ப-ரை: அவா - ஆசை, எஞ்ஞான்றும் - எக்காலத்தும், தவா - கெடாத (ஒழியாத), ஈனும் - தரும், வித்து - விதை.

அறப்பேறும் பொருட்பேறும் அழிகாமப் பேறும்நான்
மறப்பேயும் மகிழாது மகிழ்ந்தாண்ட வேங்கடனேடு
இறப்பேயும் பிறப்பேயு மின்றுகக் கோசமெலாம்
அறப்பீறும் அகநோக்கால் கண்ணேக்கம் ஆடாமோ. 1633

பொ-ரை: அறம், பொருள், இன்பம் ஆகிய மூன்றினுல் நான் மறந்தும்கூடத் மகிழ்ந்து திருப்தியடைந்து விடாமல், ஆன்ம வீடுபேற்றில் இச்சையை ஏற்படுத்திக் கொடுத்தவர் ஸ்ரீபகவான். பிறப்பும், இறப்பும் இல்லாமல் போகும்படிக்கு கருப்பையை அடைவது என்பதே முற்றிலும் நீங்க, பீறும் அகநோக்கால் அந்த ஸ்ரீ பகவானேடு கண்ணேக்க மாடாமோ!

அ.ப-ரை: கோசம் - கருப்பை (womb), பீறும் - பீச்சி அடிக்கும், அழிகாமப்பேறு - நிரந்தரமற்ற உலகாதி சுகங்கள்

கட்டுருவ நோக்குறுமெய்க் காட்சியால் கண்ணியல்பாம்
நிட்டையே மெய்ஞ்ஞான நிண்ணயமா நாட்டினுன்
சுட்டரிய ஆன்ம சொரூபமாம் வேங்கடனேடு
ஒட்டியாம் ஒன்றுய் ஒளிர்கண்ணேக்கு ஆடாமோ. 1634

பொ-ரை: அகந்தைக் கட்டு நீங்க நோக்கும் மெய்ஞ்ஞானக் காட்சியால் கண்ணேக்கமாடுதலேயே மெய்ஞ்ஞான நிஷ்டையாக நிர்ணயம் செய்தான் ஸ்ரீபகவான். சுட்டி எதிரிட்டு அறிவதற்கரிய ஆன்ம சொரூபமாகிய ஸ்ரீ வேங்கட ரமணனேடு சேர்ந்து நாம் அனனியமாய் பிரகாசிக்கச் செய்யும் கண்ணேக்கமாடாமோ!

அ.ப-ரை: கட்டுருவ - கட்டு நீங்க, கட்டு - பந்தம், உருவ - அவிழ (நீங்க), ஒட்டி - சேர்ந்து, யாம்-நாம், ஒன்ருய் - அனனியமாய், ஒளிர் கண்ணேக்கமாடல் - ஆன்மவஸ்துவாகப் பிரகாசிக்கச் செய்யும் கண்ணேக்கமாடல்.

வி-ரை: பயிலுபவரை ஆன்ம ஜோதியாகப் பிரகாசிக்க வைக்கும் திருக்கண்ணேக்கமாடல் ஸ்ரீ பகவானின் தனிப்பெருஞ் சிறப்பு என்பதைக் குறிக்கும் பாடல்களில் இந்தப் பாடல் மிகப் பிரசித்தமானது. அடுத்தப் பாடலும் அவ்விதமே அமைந்ததாகும்.

இலக்கமென்ரு என்னிதயத்து எய்தகண் நோக்காய
துலக்கமதால் எனையாண்டு தோய்ந்தவேங் கடனேடு
மலக்கமதால் உண்டாய்மற் ருேரால்தான் மாயாத
கலக்கமெலாம் கட்டழியக் கண்ணேக்கம் ஆடாமோ. 1635

பொ-ரை: என் இதயத்தை ஒரு இலக்காகக் கொண்டு எய்த, தன் திருக்கண்ணேக்க அறிவுத் தெளிவினுல் என்னை ஆண்டு என்னில் ஒன்று கலந்த ஸ்ரீ வேங்கட ரமண பிரானுெடு, மனக்கலக்கத்தினுல் உண்டாகி, மற்ற எதனுலும் மாளாத அகந்தைமய கலக்கமெல்லாம் கட்டோடு அழியும் படிக்கு கண்ணேக்கமாடோமோ!

அ.ப-ரை: துலக்கம் - தெளிவு, மலக்கம் - மனக்கலக்கம்.

உண்ணுமது ரக்கனியோடு உறுசுவைபோல் ஒன்றியெனைப்
பண்ணெடு பாட் டுப்போல் பரிந்தாண்ட வேங்கடன்பால்
உள்நுணுகி உசாவுயிரோடு உணர்வும் ஒடுங்கொடுங்கக்
கண்ணெடுகண் ணேக்கிநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 1636

பொ-ரை:கனியில் சுவை போல் என்னில் ஒன்று கலந்து, பண்ணில் பாட்டுப்போல் என்னைப் பரிந்தாண்டு கொண்டான் ஸ்ரீ வேங்கட ரமணன். உயிரோடு அகந்தை உணர்வும் ஒடுங்க, அகமுகப்பட்டு நானார் விசாரம் பயின்று ஸ்ரீ பகவானின் ஞானக் கண்ணொடு நம் கண்களை இணைத்து கண்ணேக்கமாடாமோ!

அ.ப-ரை: உள்நுணுகி - உள்ளே நுணிகி (அகமுகப்பட்டு), உசா - உசாவுதல், விசாரித்தல் (நானார் விசாரம்).

உடைவித் தகரமணன் உலையாது எனையாண்ட
நடையிற்கை வலியநறு நவநீதம் பசிதீர
அடைவிக்கப் பாற்கடலா அடியேன் இதயத்தைக்
கடைவித்த கண்ணொடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 1637

பொ-ரை: என்னை உடையவனும், ஆன்மக்கலையில் வித்தகனுமான ஸ்ரீ பகவான், சிறிது கூடத் தளர்வு என்பதேயின்றி என்னை ஆட்கொண்டான். மேலும் ஆன்ம இன்பமாகிய வெண்ணையை என் ஆன்ம பசியாரப் புசிக்கும்படிக்கு, என் இதயமாகிய பாற்கடலைத் தன் திருக்கண்ணேக்கால் கடைவித்தான், அத்தகைய அவன் கண்ணேடு நாம் கண்ணேக்கமாடாமோ!

கண்ணகத் தன்அருளே காட்டினுன் தன்னடியேற்கு
அண்ணு மலைரமணன் அழகார்ந்த பொன்மேனி
எண்ணலே எண்ணி எழுத்தால் எழுதவொணுக்
கண்ணர் அமுதனெடு கண்ணேக்கம் ஆடாமோ. 1638

பொ-ரை: ஆன்மாவாகத் தன்னருளையே தன்னடியார்களுக்குக் காண்பித்துக் கொடுத்தான் இந்த அண்ணுமலை ரமணன். அவனுடைய அழகிய ஆன்ம விஸ்வரூபம் எண்ணலும் எழுத்தாலும் எழுதவொணுதது. அத்தகைய கண்ணரமுதனெடு கண்ணேக்கமாடாமோ!

அ.ப-ரை: கண்-ஆன்மா.

வான்நந்து சித்திகளின் வைபவங்கள் சேர்ந்துகுடி
தான்தந்து கம்பீரத் தடங்கணன் வேங்கடன்என்
ஊன்நந்த வுயிர்நந்த உளம்புகுந்தாண் டானொடுபேர்
ஆனந்தம் மீதூரக் கண்ணேக்கம் ஆடாமோ. ***1639***

பொ-ரை: சித்திகளின் மகத்துவம் வான்போல் பெருகவும், அந்த சித்திகள் மேலும் பெருகும்படி அண்ணமலையில் குடிபுகுந்த, கம்பீரமாக அடியர் இதயத்தில் ஊடுருவிப்பாயும் சக்திமிக்க விழிகளையுடைய ஸ்ரீவேங்கட ரமணன், என் உடலும் உயிரும் செழிக்க என் உள்ளத்திலும் குடிபுகுந்தான். அவனொடு பேரானந்தம் பெருகக் கண்ணேக்கமாடாமோ!

அ.ப-ரை: நந்தும் - பெருகும்.

நரிகளைமுன் பரியாக்கி நவநவமாம் அப்பரியை
நரியாக்கும் திருகாளி நன்பாண்டி வேங்கடவன்
கரியனைவெண் நீறாக்கிக் கல்லாத வெளிற்றேனைக்
கரியாக்கும் கண்ணெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. ***1640***

பொ-ரை: நரிகளை குதிரைகளாக மாற்றுவதும், பின்பு அழகிய அந்தக் குதிரைகளை மீண்டும் நரிகளாக்கும் தந்திரம் படைத்தவன் தென்பாண்டிய நாட்டைச்சேர்ந்த ஸ்ரீ பகவான். அதேபோல் அகந்தை கரிபூசி கறுத்த என்னை தன் விழியால் சுட்டெரித்து தூய வெண்மை நிற திருநீறாகச் செய்தான். மேலும் ஆன்ம கல்வி பயிலாத வெளுத்த மனத்தவனாகிய என்னை சர்வசாக்ஷியாக விளங்கும் ஆன்மாவாகச் செய்தான். அத்தகைய ஸ்ரீ வேங்கடவனொடு கண்ணேக்க மாடாமோ!

அ.ப-ரை: பரி-குதிரை, திருகாளி-தந்திரசாலி, நீறு-விபூதி, வெளிற்றேன்-சூதுவாதறியாத வெள்ளை மனம் படைத்தவன். கரி - சாக்ஷி (ஆன்மா).

மானொனு மருண்டவிழி மாதரீர் நனைகவுள்சேர்
யானையால் யானைபட யாத்தாற்போல் வேங்கடனேடு
ஆனவாள் முகநோக்கால் ஞானநோக் கம்பெறுவாம்
ஆனதான் முகநோக்கிக் கண்ணேக்கம் ஆடாமோ. ***1641***

பொ-ரை: மானின் விழிகளைப் போல் அகந்தையால் மருண்டு மயக்குறும் பெண்காள்! கன்னத்தில் மதநீர் பெருகி நனைந்திருக்கும் பெண் யானையைக் கண்டு, காமவசப்பட்டு, அதன் அருகில் வரும் ஆண்யானையைப் போல், மோக்ஷ இச்சை வசப்பட்டு, ஸ்ரீ வேங்கடரமணனை அணுகி வாளின் நுனியைப் போன்று கூர்மை பொருந்திய ஞானப் பார்வையை நாம் பெறலாம். அவ்விதம் பெற்றதினால் ஸ்ரீபகவானோடு கண்ணோக்கமாடாமோ!

அ.ப-ரை: நனைகவுள்-மதநீர் பெருகி நனைந்திருக்கும் கன்னம், வாண்முகம்-வாளின் வாய்ப்புறம்.

சிறக்கணித்து நம்மைச் சிறந்தாண்ட வேங்கடனோடு
உறக்களித்தற்கு உற்றஇடை யூறுஒழிக்க உன்னுவீர்
அறக்குளித்தால் குளிரில்லை ஆமாறு நம்மிதயத்து
அறக்குளித்துப் பனிப்புஅகலக் கண்ணோக்கம் ஆடாமோ. 1642

பொ-ரை: எங்களை தன் அருள்விழியால் சிறக்க நோக்கி, சிறந்த வகையில் ஆண்டுகொண்ட ஸ்ரீ வேங்கட ரமணனோடு ஒன்றுபட்டு மகிழ்வதற்குத் தடை செய்யும் இடையூறுகளை நீக்க வேண்டுமென்று முயற்சிப்பவர்களே! அதற்கு உரிய வழி ஏதெனின், கடலில் குளிப்பதற்கு முன் அதன் குளிர்மையைக் கண்டு தயங்குபவர் எவ்வாறு அந்த கடலில் முழுவதுமாக மூழ்கி தம் தயக்கத்தைப் போக்கிக் கொள்வரோ, அவ்வாறே நம் இதயமாகிய ஆன்மக் கடலில் அகந்தை குளிர் நீங்கும்படிக்கு பகவானொடு கண்ணோக்கமாடி மகிழ மாட்டோமோ! (அவ்வாறு கண்ணோக்கமாடி களித்திருக்கலாம்: வாருங்கள் என்றவாறு).

ஆருயிரா எம்மால் அறிபடுவான் அடியேன்சொல்
வேரிமண மாலையா வேய்ந்ததிரு வேங்கடவன்
காரிகையீர் நம்மைக் கலந்தாண்டான் கழிசிறந்த
காரிகைசேர் கண்ணொடுநாம் கண்ணோக்கம் ஆடாமோ. 1643

பொ-ரை: *என் உயிர்க்கு உயிராகத் திகழும் ஸ்ரீ பகவான், நான் இதுவரை அவன்மீது சூட்டிய பாமாலைகளையெல்லாம் நறுமணம் கமழும் பூமாலைகளாக அணிந்து கொண்டான்! பெண்காள்! நம்மில் ஒன்று கலந்து நம்மை ஆன்ம வஸ்துவாக்கிய மிகச்சிறந்தப் பேரழகு வாய்ந்த கண்களையுடைய ஸ்ரீ வேங்கட ரமண பகவானொடு நாம் கண்ணோக்கமாடோமோ!*

அ.ப-ரை: *வேரி-வாசனை (நறுமணம்), காரிகை-அழகு, கழி-மிக.*

வி-ரை: காரிகை சேர் கண்ணொடு என்றதாவது: *ஆன்மவஸ்துவாதல் அழகைச் சேர்தல் என்பதாகும்.*

ஒப்பு(1): *அடியேன் சால அழகுடைத்தேன்*

-குழைத்தப் பத்து, மணிவாசகர்.

மெய்யடியார்களை ஆன்மவஸ்துவில் சேர்த்துப் பேரழகர்களாக ஸ்ரீ பகவான் மாற்றுகிறாரென்று திருக்கண்ணோக்கத்தை நிறைவு செய்கிறார் ஆசிரியர்.

ஸ்ரீ ரமணார்ப்பணமஸ்து

பிற்பகுதி

ஸ்ரீ ரமணபகவான் திருவருளால் ஆத்மசாந்தி அடைந்த

ஸ்ரீமதி ஆனந்தம்மாள் அவர்கள் ஸ்ரீ முருகனாரைப்பற்றி எழுதிய பாராட்டுரை

**அத்துமனும் ஸ்ரீரமணன் அத்துவிதச் செல்வத்தை
வேற்றுமையொன் றில்லாமல் விதவிதமா யெமக்குதவி
சாத்திரங்க ளோர்முகமாச் சாற்றியமா வாக்கியத்தால்
தேற்றியசீர் முருகாவுன் திறமுரைக்க வல்லேனே.**

அதிதீவிர பக்குவிகள் மோக்ஷமடையும் மார்க்கங்களை அதி சுலபமாக அடையும் பொருட்டு அமிர்த மொழிகளை அருளினீர். நமது பகவான் செய்த அருட்கிரந்தங்களில் ஆழ்ந்துகிடக்கும் அருமையான விமரிசனத்தைக் கேட்டு யாமெல்லோரும் தன்மய நிலையில் ரமித்தோம். யாம் முன்பே பகவானால் அறிந்திருந்த பரம ரகஸ்யம் எம்மிதயத்தில் நன்கு திடப்பட அதைத் திரும்பத் திரும்பக் குத்திக் குத்திப் புகட்டினீர். அப்போதே, அவ்விடத்தே யாமெல்லோரும் அம்மயமாய் ஆன்மாவில் அமைந்து நின்றோம். சுத்த சேதன ஆன்மாவாய்ச் சுடரும் ஒருவனே தானான அத்வைத பிரம்மஞானம் அனுபவித்து, துவித மயக்கத்தாலுண்டான அவலம் நீத்தோம். அருமறையால் அறமுதவி, எங்கள் அக முகத்தில் அபேதமாக அருட்சுவை யூட்டிய உமது ஆற்றலின் அருமை என்னே!

பகவான் அருளியுள்ள நூல் திரட்டின் நுண் பொருள் ரசத்தை நுகர்வித்தீர். நுகர்ந்து யாம் விஸ்ராந்தியுற்றோம்.

காலூன்றிப் பொழியும் ஞானக் கருணைமுகிலாக நீர் பொழிந்த வியாக்யானக் கருத்தைத் தேர்ந்து யாமெல்லோரும் கரைகாணு இன்ப வெள்ளத்தில் கரைந்து நின்றேம். தேகான்மக் கட்டவிழ்ந்து சிதாகாயப் பெருவெளியில் சேர்ந்தமர்ந்தோம். பெருமான் ரமணகுரு பிரிவாற்ருமையை அகற்றினீர். அகம் மலர்ந்து அத்வைத சாகரத்தில் அமர்ந்து நின்றேம். திடஞானம் எமக்களித்த தீரரான சின்மய முருகரே! உமது பெருமையை யார் செப்பவல்லார்!

ஓம் தத்ஸத்

இங்ஙனம்

ஆனந்தம்மாள்

ரமண நகர்
திரு அருணை
27-07-1952

பகவான் ஸ்ரீரமண மஹர்ஷிகள் விதேக முத்தியுற்றதால் துயருழந்த அன்பர் பலர் தம் கலக்கம் தீரவும் சாந்தி நிலைக்கவும் தம் ஞானத் தந்தையான ஸ்ரீ பகவான் திருவாய் மலர்ந்தருளியுள்ள உபதேசப் பொருள்களையெல்லாம் செவ்விதின் விளக்கியுதவுமாறு, பக்த சிரேஷ்டரான ஸ்ரீ முருகனுரை வேண்டிக் கொண்டனர். அவ்வாறே, ஸ்ரீ முருகனுர் தம் குருதேவரது நூல்களுக்கெல்லாம் பல மாதங்கள்வரை தொடர்ந்து முறைப்படி விரிவுரையாற்றினுர். இந்த அமுத மொழிகளைச் செவிமடுத்து இன்ப மெய்திய மெய்யன்பர்கள் எல்லோர் சார்பாகவும், அவர்களில் ஒருவரான ஸ்ரீமதி. ஆனந்தம்மாள் அவர்களால் ஸ்ரீ முருகனுரைக் குறித்து வழங்கப்பெற்ற நன்றி கலந்த மகிழ்ச்சியுரை இது.

ஸ்ரீமதி. ஆனந்தம்மாள்

(ஸ்ரீரமணாஸ்ரம வெளியீடான ஸ்ரீமதி கனகம்மாள் எழுதிய 'நினைவில் நிறைந்தவை' என்ற புத்தகத்திலிருந்து எடுக்கப்பட்டது)

பகவான் விரூபாக்ஷி குகையிலிருந்த காலத்திலேயே ஆனந்தம்மாள் பகவானைத் தரிசித்தவர். இவருடைய பெற்றோர்கள் திருவண்ணாமலையை சொந்த ஊராகக் கொண்டு அங்கேயே வாழ்ந்திருந்தார்கள்.

இவர் சிறுமியாக இருந்த காலத்திலேயே, அடிக்கடி விரூபாக்ஷி குகைக்குச் சென்று பகவானைத் தரிசித்து வருவார். சில நேரங்களில் பகவான் முன்பாக உட்கார்ந்து தியானம் செய்வதும் வழக்கம். சிறு வயது முதற்கொண்டே மனம் உள்முகமாகி தியானத்தில் ஈடுபடும்.

இவருக்குக் கல்யாணப் பருவம் வந்ததும் பெற்றோர்கள் கல்யாணத்திற்கு ஏற்பாடு செய்தார்கள். இவருக்கோ குடும்ப வாழ்க்கையில் துளியும் விருப்பமில்லை. வேண்டாமென்று சொல்லிப் பார்த்தார். பெற்றோர்கள் கேட்கவில்லை. விருப்பமின்றியே கல்யாணம் நடைபெற்றது.

இவர் தன் வழக்கப்படி சாயந்திரமானால் மலைக்குப் போய், சன்னிதியில் உட்கார்ந்து தியானம் செய்துவிட்டு வீடு திரும்புவார். இதைப் பார்த்த வீட்டிலுள்ளவர்கள் ''நீ இப்படி தினமும் போகக் கூடாது. வீட்டையும் கணவனையும் கவனிக்க வேண்டும்'' என்று புத்திமதி கூறிப் பார்த்தார்கள். அதற்கு அவர் ''நான்தான் கல்யாணமே வேண்டாமென்று சொன்னேனே! நீங்கள் கேட்டீர்களா!'' என்று மறுமொழி கூறுவார். இந்த ஈடுபாடில்லாத இல்லற வாழ்க்கையில், இவருக்கொரு ஆண் குழந்தையும் பிறந்தது. இந்த குழந்தையின் பொருட்டாவது

குடும்பத்தில் ஈடுபடுவாள் என்று வீட்டிலுள்ளவர்கள் நினைத்தார்கள்.

ஆனால் நடந்தது வேறு. அந்தக் குழந்தையினிடமும் அவர் பற்றற்று, தன் சாதனையிலேயே முனைப்பாக இருந்தார். குழந்தையை வீட்டிலுள்ளோரே கவனித்து வந்தார்கள். எந்த விதத்திலும் அவரைக் குடும்பத்தில் ஈடுபடுத்த முடியவில்லை. கொஞ்சகாலத்திற்குப்பின் கணவனும் இறந்து விட்டார்.

பகவான் மலையை விட்டிறங்கி ரமணாஸ்ரமம் ஏற்பட்ட பிறகு, ஆனந்தம்மாவின் ஜாகையும் ரமண நகரத்திற்கு மாற்றப்பட்டது. நான்கு பக்கமும் மண் சுவரெடுத்து, கூரை வேய்ந்த வீட்டில் ஆனந்தமாக இருக்க ஆரம்பித்தார். ஆனந்தம்மாளின் மகனை அவருடைய சகோதரனே வளர்த்து, படிக்க வைத்து, தன் மகளையே கொடுத்து விவாகம் செய்து வைத்தார். இவருடைய மகனும் மருமகளும் திருவண்ணாமலை டவுனிலிருக்கும் பள்ளியில் ஆசிரியர்களாகப் பணியாற்றி வந்தார்கள்.

ஆனந்தம்மாளின் தவவாழ்க்கை அவரிடம் அன்பு கொண்ட அன்பர்களால் கவனிக்கப்பட்டு வந்தது. தனம் என்னும் ஒரு மாது அவரிடம் அளவற்ற அன்பு கொண்டு அவருக்கு வேண்டியதைச் செய்து வந்தாள். தனம் என்னும் பெயர் கொண்ட அவளிடம் அன்பென்னும் தனமே நிறைந்து இருந்தது. தனம் இருக்க மறுத்தது.

ஆனந்தம்மாவிற்கு அவ்வளவாகப் படிக்க முடியாது. மதுரையில் தமிழ் ஆசிரியையாக இருந்த ஒரு அம்மாள், தனக்கு விடுமுறை கிடைக்கும்போதெல்லாம் ரமணாஸ்ரமத்திற்கு வந்து தங்குவார். இவருடைய இயற்பெயர் தெரியாது. நாங்கள் அவரை மதுரையம்மாள் என்று சொல்வது வழக்கம்.

இந்த மதுரையம்மாவும் ஆனந்தம்மாளிடம் மிகவும் நேசமாகயிருப்பார். இவர் ஆஸ்ரமத்தில் சாப்பிட்டு விட்டு

நேராக ஆனந்தம்மாவின் குடிலுக்கு வந்து விடுவார். வரும்போதே லைப்ரரியிலிருந்து நல்ல வேதாந்த புஸ்தகங்களைக் கொண்டு வருவார். இவர் படிப்பதும் ஆனந்தம்மாள் கேட்பதுமாக காலக்ஷேபம் நடக்கும். தமிழில் நல்ல வித்வத்துள்ள மதுரையம்மாளுக்கு படிக்கும்போது பல இடங்களில் சந்தேகம் வரும். அதற்கு என்ன பொருளென்று விளக்கம் கேட்பார். அதற்கான சரியான விடையைத் திருத்துமுடன் கூறுவார் ஆனந்தம்மாள். புதிர் அவிழ்ப்பதைப்போல் அவர் கூறும் பொருள் இவருக்கு ஆச்சரியமாக இருக்கும்.

கல்வி அறிவினால் புரிந்து கொள்ள முடியாத சாஸ்திர விஷயங்களை, அனுபவ ஞானத்தினால் உணர முடியும் என்பதை ஆனந்தம்மாளிடம் பார்க்கலாம். தன் வாழ்க்கையில் அவர் காலத்தை வீணாக்கவே மாட்டார். யாரைக் கொண்டாவது பகவான் நூல்களை, ரிபுகீதையைப் படிக்கச் சொல்லி கேட்பார். பகவான் சந்நிதியில் சாந்தமாக உட்கார்ந்திருப்பார். கிரிபிரதக்ஷிணம் போவார். மறந்தும் உலகியலில் தொடர்பு கொள்ள மாட்டார்.

அவருடைய தோற்றமே தூய்மையாகத் தோன்றும். காவியுடையும், கழுத்தில் ருத்ராக்ஷமும், சிரோமுண்டனமுமாக துறவிக் கோலத்துடன் விளங்குவார். அவருடைய தேவைகள் மிகக் குறைவு. ஏதோ, பசிக்குச் சாப்பிட வேண்டும் அவ்வளவுதான். சிலசமயம் தனம் வெளியூருக்குப் போக நேரிடும். அப்போது ஆனந்தம்மாவிற்கு இரண்டு நாளைக்கு வேண்டிய உணவை சமைத்து விட்டுச் சென்று விடுவாள். அவருக்கு எதைப் பற்றியும் லக்ஷியமில்லை. அவருடைய லக்ஷியமெல்லாம் தன்னைப் பற்றியதுதான்.

எனக்கு சாதுக்களுக்கு ஏதாவது பண்ணிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் தோன்றியது. நான் இருந்த இடம் வசதி குறைவானது. எப்படியோ சிரமப்பட்டு பக்கோடாவைத்

தனித்தனி பொட்டலங்களாகக் கட்டினேன். கொடுக்க வேண்டியவர்களுக்குக் கொடுத்து விட்டு, கடைசியாக ஆனந்தம்மாவின் குடிலுக்கு வந்தேன். கதவைத் திறந்து உள்ளே நுழைந்ததும், திண்ணையில் ஆனந்தம்மாள் கண்ணை மூடிக் கொண்டு தியானத்திலிருந்தார். சத்தம் கேட்டதும் திரும்பிப் பார்த்த அவர், என்னை ''வாவா! இப்படி உட்கார்!'' என்று தன்னருகில் இடம் காட்டினுர். நான் கொண்டு வந்த பொட்டலத்தை அவரிடம் கொடுப்பதற்காக நீட்டினேன்.

அதைக் கண்ட அவர், ''என்ன அது! என்ன கொண்டு வந்தே!'' என்று கேட்டார். அதற்கு நான் ''ஒன்றுமில்லே, சாதுக்களுக்கு ஏதாவது பண்ணிக் கொடுக்க வேண்டுமென்ற எண்ணம் வந்தது. கொஞ்சம் பக்கோடா செய்து கொண்டு வந்திருக்கிறேன். நீங்கள் எடுத்துக் கொள்ளுங்கள்'' என்று அருகில் வைத்தேன்.

பொட்டலத்தைப் பிரித்துப் பார்த்துவிட்டு ''சரிசரி ரொம்ப நல்லாயிருக்கு! சாதுக்களுக்கு இவையெல்லாம் வேண்டுமா! அதோ அந்த மூலையைப் பார்! தனம் ஊரிலில்லே. எனக்கு இரண்டு நாளைக்கு வேண்டிய சாதத்தை அந்தப் பானையில் போட்டு தண்ணீர் ஊற்றி வைக்கும்படி சொன்னேன். பசிக்கும் போது எடுத்துச் சாப்பிடுவேன். அதற்குமேல் என்ன வேண்டும். அப்படியே சும்மா இருக்க வேண்டியதுதானே! எண்ணம் வந்ததாம்! அதற்காகச் செய்து கொண்டுவந்தாளாம்! கண்ணை மூடிண்டு சும்மா கிடப்பியா! அதை இதை செய்துண்டு அலேவியா! பகவான் என்ன சொல்லித்து, அதை விட்டு விட்டு நீ ஏன் நேரத்தை வீணுக்குகிருய்! அவன் சன்னிதியில் கண்ணை மூடிண்டு சும்மா இருக்க வேண்டியதுதானே!'' என்று அன்புடன் கடிந்து கொண்டாள்.

அவர் கூறிய இந்த மறுமொழியைக் கேட்டதும், வாஸ்தவம் தானே அவர் சொல்லுவது! ஏன் நேரத்தை வீணுக்க வேண்டும்! நமக்கேன் இந்தப் பிரவிருத்தி, எண்ணம் வந்தால்

அடக்க வேண்டியதுதானே என்று பளிச்சென்று தோன்றியது. அதற்குப் பிறகு, எனக்கு அந்த மாதிரி எண்ணம் வருவதில்லை. மீறி வந்தாலும் இந்தச் சம்பவம் நினைவிற்கு வந்து விடும்.

அவர் தன்னுடைய நேரத்தை பெரும்பாலும் பகவான் சன்னிதியிலேயே தியானத்திலிருந்து கழிப்பார். வீட்டிற்கு வந்தாலும் யாராவது இருந்தால் படிக்கச் சொல்லிக் கேட்பார். இல்லையென்றால் கண்ணை மூடிக் கொண்டு தியானத்திலிருப்பார்.

ஸ்ரீ முருகனார் சாமியிடம் மிகவும் அன்பும் ஈடுபாடும் உள்ளவர். என்னிடமும் மிகவும் அன்பாகயிருப்பார். என்னைப் பார்த்துச் சொல்லுவார், ''இந்தச் சின்ன வயதில் உனக்குப் பகவான் தன் சன்னிதியில் இருக்கும் வாய்ப்பைக் கொடுத்திருக்கிறரே! யாருக்குக் கிடைக்கும்! நீ இந்த வாய்ப்பை நன்றாக சாதனை செய்து ஆத்ம லாபத்தைப் பெற வேண்டும். அதைத் தான் நீ லக்ஷியமாகக் கொள்ள வேண்டும். மற்றதெல்லாம் மனமயக்கம்தான்!'' என்று எனக்கு அறிவுரைக் கூறுவார். நான் அவருடன் கிரிப் பிரதக்ஷிணம் போவதுண்டு. நல்ல வைராக்கியமும் நெஞ்சுரமும் படைத்தவர்.

சில நேரங்களில் அவருடைய அன்பர்கள் தங்கள் கஷ்டங்களை அவரிடம் சொல்லுவார்கள். அதற்கு அவர், ''இதையெல்லாம் நினைத்து ஏன் புலம்பிக் கொண்டிருக்கிறீர்கள்! வாழ்வின் லக்ஷணம் அவ்வளவுதான்! எல்லாத்தையும் தள்ளிட்டு சும்மா இரு. அதை நினைக்க நினைக்க அதற்குத்தான் உரம் ஏறும். உன்னெஞ்சு உரங்கெட்டு பலஹீனமாகப் போகும். பகவான் சன்னிதியில் போய் உட்காரு, அது எல்லாம் பார்த்துக்கும்'' என்று அவர்களுக்கு தைரியம் சொல்லி சமாதானப்படுத்துவார்.

மேலும், அவர் சொல்லுவார். ''இந்த அண்ணாமலை க்ஷேத்திரத்தில் தவம் செய்துதான் அம்பிகை ஈசுவரனின்

இடப்பாகம் பெற்ருள். அதனுல் இந்தத் தலத்தில் பெண்கள் தவம் பலிக்குமென்பார். அதற்கு எடுத்துக்காட்டாக ஸ்ரீ ராமனைப் பெற்ற கௌசல்யா தேவிக்கோ, கிருஷ்ணனைப் பெற்ற தேவகி தேவிக்கோ கோவில் எழுப்பியதாக வரலாறு இல்லை. ஆனுல், நம் ரமண பகவானைப் பெற்ற அழகம்மையாருக்குக் கோவில் கட்டியிருப்பதை நாம் கண்கூடாகக் காண்கிருேம். இது ஒன்று போதாதா. பெண்மைக்கு அளித்த பெருமையை உணர்வதற்கு?'' என்று சொல்லி பெருமிதடைவார்.

ஸ்ரீ பகவானுடைய மஹாசமாதிக்குப் பின் அடியார்களெல்லாம் மூலைக்கொருவராய்ப் பிரிந்து சென்ருர்கள். சென்ற அடியார்களுக்கு சாந்தியோ சமாதானமோ கிடைக்கவில்லை. கடலில் சென்று கொண்டிருந்த பாய் மரத்தின் மேலிருந்த ஒரு பறவை பாய் மரத்தை விட்டு ஆகாயத்தில் வெகுதூரம் பறந்து சென்ருலும் தனக்குத் தங்குவதற்கு வேறு இடம் காணுமல், தானிருந்த அதே பாய்மரத்திற்கே திரும்பி வருவதைப்போல, அடியார்களும் ஒவ்வொருவராய் பகவான் சன்னிதிக்கே திரும்பி வந்து சேர்ந்தார்கள்.

வந்து ஒன்று சேர்ந்தார்களேயன்றி, பகவான் ஸ்தூல உடல் தாங்கி உலாவி வந்த ஆஸ்ரமத்தைப் பார்க்கும்போது, உள்ளம் தாங்கவொண்ணு துயரத்தையடைந்து வருந்தினுர்கள். பகவான் இருந்த இடங்களெல்லாம் பார்க்கும்போது துக்கம் பீறிட்டுக் கொண்டு வந்தது. மனம் பகவானின் தூலதேகப் பிரிவைத் தாங்கமுடியாமல் தவித்துக் கொண்டிருந்தது.

அந்த சமயத்தில்தான் ஆனந்தம்மாளும், அவரைப் போன்ற மற்ற அடியார்களும் முருகனுரிடம் சென்று, எங்கள் மனம் அமைதியுறும்படி பகவானின் ''நூல் திரட்டு''க்குப் பொருள் சொல்லும்படி வேண்டினர். அப்போதுதான் அவர்களுக்காக நூல் திரட்டுக்கு முறையாகப் பாடம் சொல்ல ஆரம்பித்தார்.

ஸ்ரீ பகவானின் நூல் திரட்டுக்கு முருகனார் விளக்கமான முறையில் உரை நிகழ்த்தினார். அவரிடம் கேட்ட உரையானது காதில் ஒலித்துக் கொண்டேயிருக்கும். அவரிடம் பாடம் கேட்ட நாட்கள் வாழ்நாளில் மறக்க முடியாத பொற்காலமாகும். இந்த உரைகளைக் கேட்ட ஆனந்தம்மாள் என்ன பாக்கியம் செய்தோமென்று பூரித்துப் போவாள்.

நூல் திரட்டின் செய்யுள் பாகம் முழுவதற்கும், முறையாகவும் விரிவாகவும் பல கிரந்தங்களிலிருந்து மேற்கோள்கள் காட்டி விளக்க உரை நிகழ்த்தினார். இதற்கு சுமார் 6 மாதங்கள் பிடித்தன. முருகனாரிடம் பகவான் நூலுக்கு பொருள் (பாடம்) கேட்டவற்கு இனி சந்தேகமே வரமுடியாது. அவ்வளவு துல்லியமாய் விளக்கம் கூறுவார்.

நூல் திரட்டு பாடம் முடிந்தபிறகும், ஆனந்தம்மாள் அடிக்கடி முருகனாரிடம் வந்து ஏதாவது நூல்களைப் பற்றி கேட்டுக் கொண்டிருப்பார். ஒருநாள் மாலை வழக்கம் போல் முருகனாரிடம் வந்து, **ஆத்ம புராணத்தில்** வரும் வாமதேவரைப் பற்றி அவர் கேட்டதாவது:

''வாமதேவருக்கு கர்ப்பவாஸ துக்கம் அனுபவிக்க வேண்டிய பிராரப்தம் இருந்தது. அது தீர்ந்த உடனே கர்ப்பத்திலிருந்த படியே ஞானம் பெற்று விட்டாரில்லையா?'' என்று முருகனாரைப் பார்த்து, கேட்டுக் கொண்டே இருந்தவர், திடீரென்று குப்புற அடித்து விழுந்தார். பக்கத்திலிருந்த நான் அவர் நமஸ்காரம் செய்கிறாரென்று நினைத்தேன். வெகு நேரமாகியும் எழுந்திருக்கவேயில்லை. பிறகு, நான் அவரைத் தூக்கி உட்கார வைத்தேன். ஆனால், அவருக்கு பிரக்ஞை இல்லை. மூச்சு மட்டும் ஓடிக் கொண்டிருந்தது.

நானும், பத்மாவும் முகத்தில் குளிர்ந்த நீரைத் தெளித்துப் பார்த்தோம். ஒன்றும் தெரியவில்லை. அவர் நிலையில் மாற்றம் ஏதும் தெரியாததினால் உடனே தனத்திற்குச் சொல்லி

அ··லுப்பினேம். அவள் டவுனுக்குச் சென்று நடந்ததை ஆ ஈந்தம்மாள் பிள்ளையிடம் சொல்லி, அவரையும் கையோடு கூட்டிக் கொண்டு வந்தாள். பிறகு ஒரு குதிரை வண்டியில் ஆனந்தம்மாவை ஏற்றிக் கொண்டு, அவர்கள் வீட்டிற்குச் சென்றார்கள்.

இரவு 9 மணி வரையில் அதே நிலையில் இருந்து பிறகு உயிர் அடங்கி விட்டது. விவேகமும் வைராக்கியமும் அனுபவ ஞானமும் கொண்ட ஒரு நல்ல ஆத்மா பகவானின் திருவடியில் கலந்து விட்டது. பிறவி எடுத்ததன் பயனை எய்தியது. கடைசி நினைப்பினும் வேதாந்த விசாரத்துடனே அடங்கிய விவேகி. அவருடைய சரீரத்தை மகனும் சகோதரனும் கூடவேயிருந்து, சமாதி செய்தார்கள். உயிரின் கடைசி நினைவிலும் ஆத்மீக சிந்தனையிலேயே இருந்து அடங்கிய உயர்ந்த ரமண பக்தையாவார்.

ஸ்ரீமதி. டி.ஆர். கனகம்மாள்

''விட்டிடில் கட்டமாம் விட்டிடாது உனைஉயிர்
விட்டிட அருள்புரி அருணாசலா'' - அக்ஷரமணமாலை, 96

ஸ்ரீமதி. கனகம்மாள் மேற்கண்ட பாடலுக்கு எழுதிய விளக்கவுரையின் சாராம்சம்:

''இறுதிக் காலத்தில் உயிர் பிரிகையில் நான் உன் திருநாம தியானபரனாக உன்னை நினைந்தவாறிருக்க அருள்பாலிப்பாய். அவ்வாறின்றி நான் உன்னை மறந்து விட்டால் (உன் ஸ்மரணையை இழந்து விட்டால்) மீளா பிறவித் துன்பத்திற்காளாகி நான் வருந்த நேரிடும் அருணாசலா!''

''ஊருக்கு உபதேசிப்பது எளிது; ஆனால் அதன்படி தாமே வாழ்ந்து காண்பிப்பது கடினம்'' என்பர் பெரியோர். தாம் எழுதிய உரைக்கு உயிர் ஊட்டும் வகையில் ஸ்ரீ ரமணத் தியானபரனராகத் தம் உயிரை ஸ்ரீ பகவான் திருவடிகளில் சமர்ப்பித்த கனகம்மாள் ஸ்ரீ ரமண பக்தர்கள் மட்டுமன்றி, ஆன்மிக மெய்யன்பர்கள் அனைவராலும் போற்றுதற்குரியவர். ஏனெனில் பொதுவாக இறைவனுக்கு பால், பழம், புஷ்பமாதிகளை சமர்ப்பித்து மாந்தர் வழிபடுவர். ஸ்ரீமதி கனகம்மாளோ வாழ்ந்த காலத்திலும் சரி, வாழ்வின் இறுதிக் காலத்திலும் சரி, தன்னையே ஸ்ரீ பகவானுக்கு சமர்ப்பித்தார். இதனினும் சிறந்த வழிபாடு உண்டோ?

மிகச் சிறந்த ரமண பக்தையாகிய ஆனந்தம்மாளின் உயிர் அவர் ஸ்ரீ முருகனார் திருவடிகளில் வணங்கியவாறிருக்கையில் பிரிந்தது. ஸ்ரீ முருகனாருக்கு நமஸ்காரம் செய்தவர் பின்பு எழுந்திருக்கவே இல்லை. ஸ்ரீ முருகனாரின் அணுக்கத் தொண்டராக வாழ்ந்த

கனகம்மாளின் உயிர் ஸ்ரீ பகவானின் சமாதியில் அவருடைய திருவடிகளில் பிரிந்தது.

நினைக்க முக்தி திருவருணை என்பது ஆன்றோர் வாக்கு! திருவருணையில் உடலை விடுவது அரியதெனின், ஸ்ரீ ரமணாச்ரமத்தில் அது நிகழ்வது அதனினும் அரிது! அதுவும் ஸ்ரீ பகவான் சமாதியில் நிகழ்வது அதனினும் அரிது! அதுவும் சாதாரண நாட்களில் நிகழாமல் காலை 9 மணி அளவில் ஸ்ரீ ரமண ஜயந்தி விழாவின் உச்ச கட்டத்தில் நூற்றுக் கணக்கான பக்தர்களின் கண் முன் நிகழ்வது அதனினும் அரிது!

இந்த தெய்விக நிகழ்வு அரங்கேறிய நாள் ஸ்ரீ பகவானின் அருள் பக்தர்கள் மீது அபரிமிதமாகப் பொங்கிப் பெருகும் ஸ்ரீ ரமண ஜயந்தி திருநாள்! மேலும் பிரம்ம, விஷ்ணுக்கள் முன் ஈசன் அருணாசல ஜோதியாய் நின்ற திருவாதிரைத் திருநாளும் புனர்வசு திருநாளும் ஒரே நாளில் சேர்ந்து வந்த அரியதோர் நாள்! (எல்லா வருடங்களிலும் இவ்வாறு சேர்ந்து வருவதில்லை). அதுவும் ஆங்கில நாட்குறிப்பேட்டின்படி (01/01/2010) புது வருட தினமும் கூட!

இவையனைத்தும் ஸ்ரீ பகவான் அருளால் திருமதி கனகம்மாள் அவர்களுக்குக் கிட்டியது. மனத்தால் ஸ்ரீ ரமண மயமாக வாழ்ந்த அந்தப் பெரியார் உடலாலும் ஸ்ரீ பகவானின் சமாதியில் ஒன்று கலந்தார்.

2010 ஆம் ஆண்டு ஜனவரி முதல் நாள் காலை நேரத்தில் ஸ்ரீபகவான் சமாதி ஹால் பக்தர்களால் நிரம்பி வழிந்தது. ஸ்ரீ ரமணாச்ரமம் ஜயந்தி விழாக் கோலம் பூண்டிருந்த நேரம்! வேதபாராயணம் அப்போதுதான் முடிவடைந்திருந்தது. அபிஷேகம் ஆரம்பமாகும் தருணம்; கனகம்மாள் சமாதி ஹாலில் நுழைந்தார்; பின்பு ஸ்ரீபகவான் சமாதியை உற்று நோக்கியபடி வடக்கு திசையில் இருக்கும் சமாதித் தூணைப் பிடித்தார்; பிடித்தவர் உடனே நிலைகுலைந்து வீழ்ந்தார். மருத்துவர் வரவழைக்கப்பட்டார். பக்தர்கள் அருணாசல சிவ

நாம பாராயணம் செய்தவாறிருந்தனர். மருத்துவர் TRK அவர்கள் ஸ்ரீபகவானோடு ஒன்று கலந்துவிட்டதை உறுதி செய்தார். அவருடைய பூதவுடல் குரங்குத் தோட்டம் வழியாக அவர் வசித்த வீட்டிற்குக் கொண்டு போகப்பட்டது. அவருடைய உறவினர்களுக்கு தகவல் தெரியப்படுத்தப்பட்டு அவர்களும் மதியம் வந்து சேர்ந்தனர். அக்ஷரமணமாலை பாராயணம் ஒலிக்க அவருடைய இறுதி யாத்திரை துவங்கியது. ஸ்ரீரமணாசிரமத் தலைவர் முன்னிலையில் அனைத்து முன்னணி ரமண பக்தர்கள் சூழ இறுதி சடங்குகள் நிறைவேற்றப்பட்டன. இவ்வாறு ஸ்ரீபகவானுக்காகவே வாழ்ந்த அதி உன்னதமான ரமண பக்தை ஒருவரின் வாழ்வு நிறைவுற்றது. இராமபிரானுக்கும், ஸ்ரீபகவானுக்கும் போன்றே கனகம்மாள் அவர்களுக்கும் ஜென்ம நக்ஷத்திரம் புனர்பூசமே! அதுவே அவரது ஆராதனை தினமாகவும் அமைந்தது ஸ்ரீபகவான் அருளே!

திருமதி. T.R. கனகம்மாளின் சொந்த ஊர் திருவண்ணாமலைதான். அதாவது, திருவண்ணாமலை ரங்கநாத ஐயர் கனகம்மாள் (TRK) என்பது முழுப்பெயராகும். அந்தண குலத்தில் திரு. T. ரங்கநாதஐயர்-ராதாம்மாள் தம்பதியினருக்கு 13-02-1922 அன்று மகளாகப் பிறந்தவர்க்கு 3 சகோதரர்களும் 2 சகோதரிகளும் இருந்தனர். அவருடைய பெரிய தந்தை திரு. ராமகிருஷ்ண ஐயர் மிகச் சீரிய ரமண பக்தர். திருவண்ணாமலையிலேயே வசித்தவர். ஸ்ரீரமணாசிரமத்திற்கு அதன் ஆரம்பகாலத்தில் ஏற்பட்ட வழக்குகளில் வழக்கறிஞர்களின் உதவி கொண்டு தீர்வு கண்டவராவார். ஆசிரமத்திற்கு தேவைப்படும் போதெல்லாம் நிரஞ்சனானந்த சுவாமிகள் அவருடைய உதவியை நாடத் தயங்கியதேயில்லை. திருவண்ணாமலை டவுன் மணியமாக செல்வாக்குடன் வசதியாக வாழ்ந்த ராமகிருஷ்ண ஐயர் பாண்டிச்சேரியில் உள்ள ஒரு உப்பளத்தை உரிமை எடுத்துத் தொழில் செய்தவர்.

இவருடைய வீட்டிற்கு காவ்யகண்டர் தன் சீடர்களோடு நினைத்த நேரத்தில் அடிக்கடி வந்து தங்குவது வழக்கம்.

திருமதி. கனகம்மாளின் தந்தை ஸ்ரீ. ரங்கநாத ஐயர் கர்நூல் ஜில்லாவில் தொழில் நிமித்தம் சென்றவர் குடும்பத்துடன் அங்கேயே தங்கிவிட்டார். திருமதி.TRK தன் பெற்றோர்களுடன் திருவண்ணாமலை வரும்போதெல்லாம் ஆசிரமம் சென்று ஸ்ரீபகவானைத் தரிசிப்பது வழக்கம். ஒரு முறை சுமார் 8 வயது சிறுமியாக இருந்தபோது பகவானை தரிசனம் செய்தார். அப்போது பகவானுடைய சிரித்த முகம் அவருடைய பிஞ்சு மனதில் பசுமரத்தாணிபோல் பதிந்தது; அந்த சிறு வயதிலேயே 'ஸ்ரீ பகவான் தன் இதயத்தில் நிரந்தரமாக குடிபுகுந்தார்' என்று திருமதி.TRK அவர்கள் பிற்காலத்தில் பல முறை கூறியுள்ளார். இதுவே 1946-ம் ஆண்டு ஸ்திரவாசமாக அவர் திருவண்ணாமலையில் தங்கக் காரணமாயிற்று .

அப்போது ஸ்ரீரமண நகரில் வீடுகள் மிக மிகக் குறைவு. கோமுட்டி லக்ஷ்மியம்மாள் வீட்டில் பின்புறத்தின் கடைசி அறைதான் வாடகைக்குக் கிடைத்தது. அந்த அறையின் எதிரே ஒரு மிகப் பெரிய குப்பைக் குழி; வேலியருகே பாம்பு புற்றுக்கள்; பாம்பு, பூனை, எலிகளின் நடமாட்டம்; மின் வசதி கிடையாது; கிணற்றுநீர் குளிப்பதற்கே போதுமானதென்பதால் துணிகள் துவைப்பதற்கு வெளியேதான் போக வேண்டும்; சமைப்பதற்கு கரியடுப்போ, விறகடுப்போதான்; பாதி நாட்கள் தயிர் சாதமும் ஊறுகாயும்தான் சாப்பாடு; சாம்பார் வைத்து காய்கறி சமைத்தால் விருந்துதான்; சமைத்த உணவை அப்படியே வைத்துவிட்டு ஆசிரமத்திற்குப் போக முடியாது; சமைத்த பாத்திரத்தின் மீது ஒரு பெரிய ட்ரம்மைக் கவிழ்த்து மூடி, அதன்மீது ஒரு பெரிய கல்லையும் தூக்கி வைக்கவேண்டும்; இல்லாவிட்டால் பெரிய எலிகள் உணவுப் பாத்திரங்களைத் தள்ளிப் பாழாக்கிவிடும்; அரிசி, மண்ணெண்ணெய், சர்க்கரை எல்லாமே ரேஷன், தட்டுப்பாடுதான்; இத்தனைத் துயரங்களும்

ஸ்ரீபகவானைப் பார்த்த மாத்திரத்தில் பஞ்சாகப் பறந்துவிடுமென்று TRK அடிக்கடி கூறுவார். அதனால் அந்த சிறிய அறை தம் இருப்பிடமாகக் கிடைத்ததை ஒரு பெரும் பாக்கியமாக நினைத்து அவர் மகிழ்ச்சி அடைந்தாராம். இவ்வாறு சுமார் 24 வயதில் TRK தன்னந்தனியாக இவ்வளவு இடர்பாடுகளுடன் ஸ்ரீபகவானின் மீது வைத்த நம்பிக்கை ஒன்றையே ஆதாரமாகக் கொண்டு தம் ஆன்மிகப் பயணத்தைத் தொடங்கிய அதிசயத்தக்க வாழ்க்கை அவருடையது!

அவருடைய ஆன்மிக பயணம் 1946-ல் ஸ்ரீபகவானின் நேரடி கண்காணிப்பில் துவங்கியது; முடிவில் 2010-ஆம் ஆண்டு நூற்றுக்கணக்கான ரமண அன்பர்கள் கண்முன் உடலாலும் ஸ்ரீபகவானின் திருவடிகளில் ஒன்று கலக்கும்படியாகப் பரிபூரணமடைந்தது. திருமதி. கனகம்மாள் பெற்ற இந்தப் பெரும்பேறு, அவர் 1946-ம் ஆண்டு வெளிப்படுத்திய ஞான வைராக்கியத்தால் அப்போதே உறுதி செய்யப்பட்டு விட்டது போலும்! இந்த உண்மையை எடுத்துரைக்க வேண்டியே இவ்வளவு விரிவாக TRK அவர்களின் ஆரம்ப கால அருணாசல அனுபவங்களை எழுத நேர்ந்தது.

பின்பு TRK தம்முடைய பழைய நினைவுகளையெல்லாம் மிக விரிவாக "நினைவில் நிறைந்தவை" என்னும் நூலின் வாயிலாக பகிர்ந்து கொண்டிருக்கிறார். மெய்யன்பர்கள் அனைவரும் அவசியம் வாசித்துணர வேண்டிய இந்தப் புத்தகம் ஸ்ரீரமணாசிரம வெளியீடாகும். நாம் எங்கேயிருந்தாலும் ஸ்ரீரமணாசிரமத்திற்கும், ஆங்கே ஸ்ரீபகவான் சந்நிதானத்திற்கும் நம்மைக் கொண்டு சேர்க்கும் அதி அற்புத நூல் இது!

'அம்மா' என்று அன்பர்கள் அனைவராலும் அன்பொடு அழைக்கப்பட்ட TRK அவர்களை முதன் முதலாகப் பார்ப்பவர்களைக் கூட வசீகரிப்பது அவருடைய எளிமையும் அன்புமே! ஆனால் அவருடன் நெருங்கிப் பழகும் வாய்ப்பு கிடைத்த பாக்யசாலிகள் அதிசயிப்பது தம் வாழ்க்கையில் தாம்

சந்திக்க நேர்ந்த அனைத்து நிகழ்வுகளையும் ஸ்ரீபகவானின் அருட் பிரசாதமாக ஏற்றுக் கொண்ட அவரது மனோபாவமே! ஸ்ரீபகவானிடத்தில் அவர் வெளிப்படுத்திய பக்தி அளப்பரியது. ஸ்ரீபகவானின் மகாசமாதிக்குப்பின், அவருடைய உறவினர்கள் அவரை சென்னைக்கோ அல்லது அவர் மிகவும் போற்றிய காஞ்சி மகாஸ்வாமிகள் வசிக்கும் காஞ்சீபுரத்திற்கோ ஜாகை மாற்றும்படி மிகவும் வற்புறுத்தினர். அவரோ மிகப் பிடிவாதமாக மறுத்தார். இறுதியில் காஞ்சி மகாஸ்வாமிகளே அவர் திருவருணையிலே தொடர்ந்து இருக்கட்டுமென்று ஆக்ஞாபித்தார். ஸ்ரீபகவான் தம் இதய தெய்வமென்றும், காஞ்சி மகாஸ்வாமி தம் குலகுரு என்றும் TRK கூறுவார். ஆகவே தாம் திருவருணையில் தொடர்ந்து வாசம் செய்ய காஞ்சி முனிவரின் அருளாசி கிடைத்ததை எண்ணி மிகவும் மகிழ்ச்சியடைந்ததாக பிற்காலத்தில் TRK கூறியிருக்கிறார்.

ஸ்ரீபகவானைப் பார்த்த மாத்திரத்தில் தமக்கு ஐம்புலன்களும் ஒடுங்கி, மனமும் செயலற்றுப் போய் விடுமென்று TRK பலமுறை கூறியுள்ளார். அதற்கேற்ப ஸ்ரீபகவானின் மகாசமாதிக்குப் பின்பும் வாழ்ந்து காட்டியவர் அவர். உலகப்பற்றை நீக்கி எந்தவித ஆசைகளின் எழுச்சியுமற்று ஸ்ரீரமண நினைவுகளே வாழ்வாக வாழ்ந்த அவர் திரு. குஞ்சு சுவாமிகள், திரு. V. கணேசன் ஆகியோரின் மிகுந்த, தொடர்ந்த வற்புறுத்தல்களின் பேரில் ஸ்ரீரமண நூல் திரட்டிற்கு மிக விரிவான விளக்கவுரையை எழுதினார். இதில் ஆச்சரியப் படும்படியான விவரம் ஒன்று உண்டு! ஸ்ரீரமண நூல் திரட்டிற்கு ஸ்ரீ முருகனாரிடம் இவர் பாடம் கேட்டது 1952ஆம் வருடமாகும். உரை எழுதியதோ 1990 ஆம் வாக்கில்தான் . இதற்காக எந்த வித குறிப்புக்களையும் அவர் எழுதி வைத்துக் கொள்ளவில்லை. ஏனெனில் இப்படிப்பட்ட ஒரு விளக்கவுரையை பின்னர் எழுத நேரிடும் என்று அவர் கனவிலும் நினைக்கவில்லை. இந்த உரை முழுவதும் ஸ்ரீ முருகனாரிடம் பாடம் கேட்ட நினைவிலிருந்தே

எழுதப்பட்டது! இரண்டு பாகங்களாக ஸ்ரீரமணாசிரமத்தால் 1991-ல் பிரசுரிக்கப்பட்ட இந்த விளக்கவுரை இன்றைக்கும் மீண்டும் மீண்டும் பற்பல பதிப்புக்களாக வெளிவந்த வண்ணம் உள்ளது.

பக்தி இலக்கியத்திற்குப் பெருத்த பெருமை சேர்க்கும் அதி அற்புதமான இந்தப் பணியைப் பற்றிப் பேசும் போதெல்லாம் 'நானா இதை திட்டமிட்டுச் செய்தேன்? இது தானாக நிகழ்ந்தது. எல்லாம் ஸ்ரீபகவான் செயல்! இதில் என் பங்கு என்ன இருக்கிறது?' என்பார். இவர் எழுதிய 'நினைவில் நிறைந்தவை' நூலைப் பற்றி முன்னமே பார்த்தோம்.

தாம் இத்தகைய ஒப்பற்ற இலக்கியப் பணியைப் புரிந்தது மட்டுமன்றி, தம்மை வந்தடைந்தவர்களையும் இதுபோன்ற நற்பணிகளில் பெரிதும் ஊக்குவித்தவர் திருமதி. கனகம்மாள் அவர்கள் ஆவார். அன்னார் அளித்த உற்சாகத்தினால்தான் இந்த உரையாசிரியர் 14-ம் நூற்றாண்டைச் சேர்ந்த வேதாந்த படைப்பான 'ஒழிவில் ஒடுக்கத்திற்கு' விளக்கவுரை எழுத நேர்ந்தது. அது பற்றிய விரிவான விவரங்களை ஸ்ரீரமண பக்த சமாஜத்தின் பதிப்பான 'ஒழிவில் ஒடுக்கம்' நூலில் காணலாம்.

துவாபர யுகத்தில் ஸ்ரீகிருஷ்ண பகவானையே நினைந்து வாழ்ந்த ராதையையும், கலியுகத்தில் வாழ்ந்த பக்த மீராவையும், சூடிக்கொடுத்த நாச்சியாராம் ஆண்டாள் கோமகளையும் பற்றி நாம் கேள்விப்பட்டிருக்கிறோம். அப்படிப்பட்ட நவீன, தற்காலத்திய ராதையாக, மீராபாயாக, சூடிக் கொடுத்த நாச்சியாராக, ஸ்ரீரமண பக்தர்களுக்கோர் பக்த சிரோன்மணியாக நம் கண் முன் வாழ்ந்து காட்டிய திருமதி. கனகம்மாளைப் பற்றிய எந்த கட்டுரையும் அவரிடமிருந்து பொங்கிப் பெருகிய ஆன்ம அமைதியைக் குறிப்பிடாமல் நிறைவுறாது! உடலை உகுக்கும்போதும் அதை ஸ்ரீபகவானின் திருவடிகளில் சமர்ப்பித்த அந்த பெரியாரின் அதிசய நிகழ்வு அத்தகையதோர் ஆன்ம பேரின்பப் பெருவாழ்வு ஒவ்வொரு

ரமண பக்தருக்கும் அவர் தம் வாழ்வின் இறுதிப் பரிசாகக் காத்துக் கொண்டிருக்கின்றதென்ற உண்மையை உலகுக்கு பறைசாற்றுகின்றது. (Highly inspiring and energizing!) ***அவரொடு எந்த விதத்திலாவது தொடர்பு கொண்டிருந்தவர்கள் பாக்கியசாலிகள்!*** *இன்று அவரது பூத உடல் மறைந்தாலும் ரமண சிதாகாச பெருவெளியில், அவருடன் பழகிய பாக்கியசாலிகளின் நெஞ்சங்களில் அவருடைய புகழுடல் என்றும் துருவ நட்சத்திரம் போல் நீங்காது பிரகாசித்துக் கொண்டிருக்கும்.* ***ஸ்ரீ ரமண பக்தி வெள்ளமே ஒரு மனித உரு கொண்டாற்போல் வாழ்ந்த அந்தப் பெரியாரின் பெயரும் புகழும் எந்நாளும் வாழி நீடூழி!***

ஸ்ரீரமணார்ப்பணமஸ்து

காட்சிப் பதிகம்

(ஆன்மக் காட்சியை தம் உள்ளத்தில் இறைவன் காட்டிக் கொடுத்தாரெனல்)

பண்: பழம்பஞ்சுரம் (சங்கராபரணம்)

மற்றுமப் பற்றெனக் கின்றி-என்னும் தேவாரப் பண்;
பிணக்கி லாத பெருந்துறை-என்னும் திருவாசகத் திருக்கழுக்குன்றப் பதிகத்தைத் தழுவியது.

(ஸ்ரீ ரமண சந்நிதி முறை, தலைப்பு எண்: 35 பாடல் எண்கள்: 335-344)

திருச்சிற்றம்பலம்

தூல சூக்ஷும தேக மோடு
தொடக்கு அறுத்தவர் தோழனே
ஓல மிட்டுவந்து உன்னை நம்பி
ஒழுகி னேற்கு ரமணநீ
போலி யற்றநின் பொன்னின் மேனியில்
புந்தி மூழ்கிய போழ்தின்வாய்க்
கால மேபெறக் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. 1

(அ.ப-ரை: புந்தி - புத்தி)

துளங் கலாத்துற வாதி யாய
குணத் தவர்தொழும் தூயனே
விளங்கு ஞான விருப்பி னால்உனை
மேவி னேற்கு ரமணநீ
வளங்கு லாவுநின் வண்ண மேனியில்
சிந்தை வைகிய வைகல்வாய்க்
களங்கி லாதகண் காட்சி பற்பல
காட்டி னாய்மனக் கண்ணுளே. 2

(அ.ப-ரை: துளங்கலா - அசைக்க முடியாத)

வள்ள லாக வரம்ம கிழ்ந்து
வழங்கு கின்ற வரதனே
உள்ள மோடுஉனை உற்ற டைந்தநல்
ஊழி னேற்கு ரமணநீ
நள்ள லாகிஉன் நல்வ னப்பை
நயந்து நோக்கிய நள்ளிராக்
கள்ள மற்றகண் காட்சி பற்பல
காட்டி னைய்மனக் கண்ணுளே. 3

(அ.ப-ரை: நள்ளலாகி - நட்பொடு)

கரையல் உற்ற கருத்தர் தங்கள்
கருத்தில் உற்ற கருத்தனே
புரையி லாதசெம் பொன்ன டிச்சரண்
புக்க வெற்கு ரமணநீ
விரைய லாகிஉன் மெய்வ னப்பை
விழைந்து நோக்கிய வேலைவாய்க்
கரையி லாதகண் காட்சி பற்பல
காட்டி னைய்மனக் கண்ணுளே. 4

அண்டி னார்க்குநன்று ஆற்று கின்ற
அருட்பெ ரும்கடல் அண்ணலே
தொண்டு பூண்டு துணைம லர்ப்பதம்
துன்னி னேற்கு ரமணநீ
கொண்ட புன்னகை கூடு நின்முகம்
கூர்ந்து நோக்கிய காலையில்
கண்டி லாதகண் காட்சி பற்பல
காட்டி னைய்மனக் கண்ணுளே. 5

மாசி லாத குணத்து மாதவர்
வாழ்த்து கின்ற திவாகரா
ஆசி லாதநல் அன்பி ஞல்உனே
அண்டி னேற்கு ரமணநீ
ஏசி லாஎழில் ஏய்ந்த நின்முகம்
ஏன்று நோக்கிய வேல்வையில்
காசி லாதகண் காட்சி பற்பல
காட்டி ஞய்மனக் கண்ணுளே. 6

(அ.ப-ரை: திவாகரன் - சூரியன். வேல்வையில்-சமயத்தில்,காலத்தில், தருணத்தில். ஆசு - குற்றம்)

மனம்அ வித்து மடித்து ளோரும்
மதித்தி டத்தகு மாண்பனே
நினது தாள்துணே நேர்ந்து அடைந்தஇந்
நேய னேற்கு ரமணநீ
வனமி குத்த மதிமு கத்தினே
வாய்ப்ப நோக்கிய வைகல்வாய்க்
கனமி குத்தகண் காட்சி பற்பல
காட்டி ஞய்மனக் கண்ணுளே. 7

நாம ரூப நயப்பி லாதமெய்ஞ்
ஞான யோகியர் நாதனே
க்ஷேம முற்ற சிவம்எ ஞஉனேத்
தேறி னேற்கு ரமணநீ
வாம முற்றநின் வாண்மு கத்தை
மகிழ்ந்து நோக்கிய வைகல்வாய்க்
காமர் உற்றகண் காட்சி பற்பல
காட்டி ஞய்மனக் கண்ணுளே. 8

ஒருத்த ராலும் உணர்க லாத
        ஒருமை யாய ஒருத்தனே
அருத்தி யாயநல் அன்பி னால்உனை
        அண்டி னேற்கு ரமணநீ
திருத்த மாம்எழில் சேர்ந்த நின்முகம்
        தேற நோக்கிய போழ்தின்வாய்க்
கருத்து மாழ்குறுங் காட்சி பற்பல
        காட்டி னாய்மனக் கண்ணுளே. 9

(அ.ப-ரை:அருத்தி - ஆர்த்தி, ஆசை)

மாணா ணாத மயக்கு அறுத்தவர்
        மாசிலாத மனத்துளாய்
நாணாத நயப்பினால் உனை
        நாடினேற்கு ரமணநீ
பூணாத நின் போதம் ஏற்படப்
        போந்த போழ்தில் என் கட்புலம்
காணாத கண்காட்சி பற்பல
        காட்டினாய் மனக் கண்ணுளே. 10

அ.ப-ரை: மாணாத - மாய்க்கமுடியாத. நாணாத - தயக்கமற்ற
நயப்பினால் - பக்தியினால். பூணாத - எளிதில் அடைய முடியாத
போதம் - அனுபவப்பட்ட ஆன்ம ஞானம்.
கட்புலம் (கண்+புலம்) - கண் முதலான ஐம்புலன்கள்.
காணாத - காண இயலாத.

திருச்சிற்றம்பலம்

திருக்கண்ணோக்கம்

(ஸ்ரீ பகவானுடைய சக்ஷுதீக்ஷையின் அபரிமிதமான சக்தியை விவரித்தல்: ஸ்ரீ ரமண சந்நிதிமுறைக்கே பெருமை சேர்க்கும் தனிப்பெரும் சிறப்புடையன இந்த அதிகாரத்தின்கண் அமைந்துள்ள பாடல்கள்).

பண் : சீகாமரம் (நாதநாமக்கிரியை)

கள்ளார்ந்த பூங்கொன்றை - என்னும் தேவாரப் பண்

(ஸ்ரீ ரமண சந்நிதிமுறை, தலைப்பு எண்: 110 பாடல் எண்கள்: 1612-1643)

திருச்சிற்றம்பலம்

உற்பலமாம் கண்ணீர்மண் ணோடுஇயைந்தும் கண்ணோடும்
பொற்புடைமெய்ஞ் ஞானதருப் புலப்படநீர் கண்டீரோ
மற்புயவான் கவடுவிட்டு மன்னுயிர்மேற் கண்ணோடும்
கற்பகவேங் கடனொடுநாம் கண்ணோக்கம் ஆடாமோ. 1

எண்ணியவை எண்ணியவாறு எய்திடலாம் ஏழையீர்
மண்ணிடைவண் குளத்துறங்கு மதர்ப்புடைமீன் விழிபோல
உள்நிலவு நாட்டத்தால் உளத்துறங்கும் ஓரியல்பால்
கண்ணிமையா ரமணனொடு கண்ணோக்கம் ஆடாமோ. 2

பண்ணாய பணிமொழியீர் பைங்குவளைக் கண்மடவீர்
எண்ணாத எண்ணமெலாம் எண்ணவுறும் பேதைமைசேர்
பெண்ணாம்எம் போலியரால் பேசவொணாப் பேருணர்வாம்
கண்ணாய ரமணனொடு கண்ணோக்கம் ஆடாமோ. 3

கண்ணாகி அக்கண்ணில் கருமணியாய் அம்மணியில்
பண்ணாத பாவையாய்ப் பாவையதன் நாட்டமுமாய்
விண்ணாகி விண்மணியாய் இத்தனைக்கும் வேறாகும்
கண்ணாய ரமணனொடு கண்ணோக்கம் ஆடாமோ. 4

கண்ணுளர் மன்பதையின் கண்ணுகக் காண்டலுறும்
எண்ணுகி எழுத்தாகி எவற்ருனும் கண்டறிய
ஒண்ணுத இயல்பாய உண்மையறிவு ஆனந்தக்
கண்ணுய ரமணனெடு கண்ணேக்கம் ஆடாமோ. 5

கண்ணகன்மா ஞாலத்துக் கண்பெற்ற காரிகையீர்
கண்ணுய புலமொன்றே ஐயுணர்வும் கவர்ந்துகொளக்
கண்ணனெடு திண்ணனும் கண்ணியர்தம் கண்ணுக்கும்
கண்ணுய ரமணனெடு கண்ணேக்கம் ஆடாமோ. 6

கண்ணகன்மா ஞாலத்தோர் கண்மாயம் காண்கெனவே
விண்ணுமண்ணும் பாதலமும் மெய்ஞ்ஞானப் பரவெளிக்குஊண்
பண்ணியருள் வாழ்வளிக்கும் பரஞான சித்தநடன்
கண்ணுதல்வேங் கடனெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 7

கண்ணேடு கண்காட்சி கலக்குங்கால் காதலருள்
எண்ணுத வாய்ச்சொல்லால் ஏதுபயன் எங்கைமீர்
பண்ணுய வாய்ச்சொற்கள் பயனறவேங் கடரமணக்
கண்ணுளன் தன்னெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 8

நோக்குஉருவாய் நோக்குள்ளே நுழைந்தானைத் தந்நோக்கால்
நோக்குறுவார் நோக்காரா நோக்காதார் நோக்குதலால்
நோக்கரிய நோக்கானை நோக்கலுறில் தடையாம்அந்
நோக்கறவேங் கடனெடுகண் ணேக்கநாம் ஆடாமோ. 9

மீட்சியே இல்லாத வீட்டின்ப வேட்கையுடைப்
பூட்சியீர் செங்கமலப் பொன்னனையீர் வீட்டுலக
ஆட்சியான் வேங்கடவன் அந்தமிலா மெய்ஞ்ஞானக்
காட்சியான் தன்னெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 10

அவிச்சைஇருட் படலத்துக்கு ஆதித்தன் தன்அடியார்
தவிச்சதவிப்பெல்லாம் தணிப்புற்ற தண்ணளியான்
கவிச்சமுழு மதிக்குடைவேங் கடனெடுஅன னியநோக்கால்
அவிச்சின்னமாய் அடியீர் கண்ணேக்கம் ஆடாமோ. 11

ஏவலிடை நின்றெழுகும் எங்கைமீர் கண்ணொளியும்
தாவலறு கதிரொளியும் சார்வதுபோல் சங்கையறச்
சீவபரமா ஆன்மாக்கள் சேர்ந்திடவேங் கடரமணக்
காவலனொடு ஒன்ருகக் கண்ணேக்கம் ஆடாமோ. 12

கலாநிதிவேங் கடரமணன் கண்ணுதித்த கலாநுபவம்
அலாதுபிறிது ஓர்நுகர்ச்சி அணுத்துணையும் அறியாதீர்
நிலாமுகிபோல் சீரியநன் நீர்மையீர் நீக்கமிலாக்
கலாமதிமா முகனொடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 13

கடிகமழ்பூங் குவளையிடைக் கமலம்அக் கமலமெனும்
தடமலர்வாய்க் குவளைகளும் தாமழகாப் பூத்திடவே
மடவரலீர் வாள்விழியால் மயக்கறுக்கும் மாதவவேங்
கடரமணன் தன்னொடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 14

தள்ளாதே வேதியரும் தாங்கொள்ளத் தக்கதுகாண்
எள்ளாதே உள்ளினும்பே ரின்பமொடு சற்றுமுளம்
கொள்ளாதே நோக்கினும்உட் கொள்ளாத உவகைதரும்
கள்ளாய ரமணனொடு கண்ணேக்கம் ஆடாமோ. 15

செத்தாலே திறப்படுவோம் செத்தாலோ பிறந்திடுவோம்
எத்தாலே வாழ்ந்திடுவோம் எனக்கருதி ஏமாப்பீர்
இத்தாலே வாழ்ந்திடலாம் எங்கள்வேங் கடரமணக்
கத்தாவோடு ஒருமுகமாய்க் கண்ணேக்கம் ஆடாமோ. 16

காக்கையிரு கண்களுக்கு மணியொன்றே கலந்தாற்போல்
தாக்குமிரு நிலையினுக்கும் சார்கரியாய் என்னிதயச்
சேக்கையிடை உறைரமணன் சிறப்பெய்தக் காரண்டம்
காக்கைக்குத் தோன்றலொடு கண்ணேக்கம் ஆடாமோ. 17

அங்கலாய்ப் புற்ற அடியோம் உயிர்ப்பயிரை
மங்குலாய்க் காத்தவருள் மார்த்தாண்ட வேங்கடன்பால்
கொங்குலாம் கார்க்குழலீர் குவிந்தஇத யத்துளைசேர்
கங்குலாம் அவிச்சைகெடக் கண்ணேக்கம் ஆடாமோ. 18

உ[illegible]ாயம் போல் ஓவாது உருண்டு உருண்டுஇவ் உலகத்து
ம[illegible]ளால் பிறந்திறக்கும் மாணு மனத்தேனைத்
தெருளாளனு நெஞ்சம் திறப்பித்த வேங்கடப்பேர்
அருளாளன் கண்ணெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 19

ஈட்டியவல் வினையால்நான் இடைந்துபடாது அவ்வினையை
வீட்டியவேங் கடப்பெம்மான் விளைந்தேன்போல் என்தலைமேல்
சூட்டியபூந் தாளான்தன் சொரூபத்தைக் குருடற்கும்
காட்டியபூம் கண்ணெடுநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 20

நகநோக்கி நம்மைவெந் நரகத்துள் ஆழ்த்தும்பாழ்
முகநோக்கால் வெளிநோக்கி மோகத்துள் மூழ்காதே
தகநோக்கி நம்மைத் தடுத்தாண்ட வேங்கடனேடு
அகநோக்கால் அகமகிழக் கண்ணேக்கம் ஆடாமோ. 21

அறப்பேறும் பொருட்பேறும் அழிகாமப் பேறும்நான்
மறப்பேயும் மகிழாது மகிழ்ந்தாண்ட வேங்கடனேடு
இறப்பேயும் பிறப்பேயு மின்ருகக் கோசமெலாம்
அறப்பீறும் அகநோக்கால் கண்ணேக்கம் ஆடாமோ. 22

கட்டுருவ நோக்குறுமெய்க் காட்சியால் கண்ணியல்பாம்
நிட்டையே மெய்ஞ்ஞான நிண்ணயமா நாட்டினுன்
சுட்டரிய ஆன்ம சொரூபமாம் வேங்கடனேடு
ஒட்டியாம் ஒன்ருய் ஒளிர்கண்ணேக்கு ஆடாமோ. 23

இலக்கமெனு என்னிதயத்து எய்தகண் நோக்காய
துலக்கமதால் எனையாண்டு தோய்ந்தவேங் கடனேடு
மலக்கமதால் உண்டாய்மற் ருேரால்தான் மாயாத
கலக்கமெலாம் கட்டழியக் கண்ணேக்கம் ஆடாமோ. 24

உண்ணுமது ரக்கனியோடு உறுசுவைபோல் ஒன்றியெனைப்
பண்ணெடு பாட் டுப்போல் பரிந்தாண்ட வேங்கடன்பால்
உள்நுணுகி உசாவுயிரோடு உணர்வும் ஒடுங்கொடுங்கக்
கண்ணெடுகண் ணேக்கிநாம் கண்ணேக்கம் ஆடாமோ. 25

உடைவித் தகரமணன் உலையாது எனையாண்ட
நடையிற்கை வலியநறு நவநீதம் பசிதீர
அடைவிக்கப் பாற்கடலா அடியேன் இதயத்தைக்
கடைவித்த கண்ணொடுநாம் கண்ணோக்கம் ஆடாமோ. 26

கண்ணாகத் தன்அருளே காட்டினான் தன்னடியேற்கு
அண்ணா மலைரமணன் அழகார்ந்த பொன்மேனி
எண்ணாலே எண்ணி எழுத்தால் எழுதவொணாக்
கண்ணார் அமுதனொடு கண்ணோக்கம் ஆடாமோ. 27

வான்நந்து சித்திகளின் வைபவங்கள் சேர்ந்துகுடி
தான்தந்து கம்பீரத் தடங்கணான் வேங்கடன்என்
ஊன்நந்த வுயிர்நந்த உளம்புகுந்தாண் டானொடுபேர்
ஆனந்தம் மீதூரக் கண்ணோக்கம் ஆடாமோ. 28


நரிகளைமுன் பரியாக்கி நவநவமாம் அப்பரியை
நரியாக்கும் திருகாளி நன்பாண்டி வேங்கடவன்
கரியனைவெண் நீறாக்கிக் கல்லாத வெளிற்றேனைக்
கரியாக்கும் கண்ணொடுநாம் கண்ணோக்கம் ஆடாமோ. 29

மானென மருண்டவிழி மாதரீர் நனைகவுள்சேர்
யானையால் யானைபட யாத்தாற்போல் வேங்கடனோடு
ஆனவாள் முகநோக்கால் ஞானநோக் கம்பெறுவாம்
ஆனதான் முகநோக்கிக் கண்ணோக்கம் ஆடாமோ. 30

சிறக்கணித்து நம்மைச் சிறந்தாண்ட வேங்கடனோடு
உறக்களித்தற்கு உற்றஇடை யூறுஒழிக்க உன்னுவீர்
அறக்குளித்தால் குளிரில்லை ஆமாறு நம்மிதயத்து
அறக்குளித்துப் பனிப்புஅகலக் கண்ணோக்கம் ஆடாமோ. 31

ஆருயிரா எம்மால் அறிபடுவான் அடியேன்சொல்
வேரிமண மாலையா வேய்ந்ததிரு வேங்கடவன்
காரிகையீர் நம்மைக் கலந்தாண்டான் கழிசிறந்த
காரிகைசேர் கண்ணொடுநாம் கண்ணோக்கம் ஆடாமோ. 32

ஸ்ரீரமணார்ப்பணமஸ்து



ஸ்ரீ ரமண பக்த ஸமாஜத்தின் இதர வெளியீடுகள்

1. திருக்கு திருசிய விவேகம்
2. அருணை ரமணரும் அன்பு அன்னையும்
3. அருணை ரமணேசன் திருவேங்கடமுடையானே
4. ஸ்ரீ ரமண சந்நிதி முறை பூங்கொத்து - 1
5. சிவபுராணமும் ஸ்ரீ ரமண புராணமும்
6. திருவண்டப்பகுதி
7. திருச்சாழல்
8. ஸ்ரீ ரமண சந்நிதி முறை சங்கிரஹம்
9. அவஸ்தாத்திரயம்
10. Upadesa Saram - An Introduction and Overview
11. திருப்பள்ளியெழுச்சியும் - திருவெம்பாவையும்
12. மணமாலை இன்பம் (அக்ஷரமணமாலை விளக்கவுரை)
13. உள்ளது நாற்பதும் உபதேச உந்தியாரும்
14. உபதேச சாரம்
15. ஸ்ரீ ரமண நாற்பது (ஸ்ரீ ரமண சத்வாரிம்ஶத்)
16. ஒழிவில் ஒடுக்கம் விளக்கவுரை

நூலைப் பற்றி...

ஸ்ரீமுருகனாரின் சுவானுபூதியில் உருவாகி, ஓதும் அன்பர்களை ஸ்ரீரமணானந்த சாகரத்தில் திளைக்க வகை செய்யும் இந்த கிரந்தம் தமிழ் இலக்கியமே இதுவரை கண்டிராத ஒன்று! இத்தகையதோர் நூலை இயற்றியதினால் தெய்வப்புலவர்களாம் கம்பநாட்டாழ்வார், வள்ளுவப் பெருந்தகை, இளங்கோவடிகள் ஆகியோர் வரிசையில் வணங்கத்தக்கவராக உயர்ந்து ஒளிர்கிறார் ஸ்ரீமுருகனார்.

ஏனெனில் இதில் பக்தியும் ஞானமும் ஒரு சேரப் பொங்கிப் பெருகிப் பரிபூரணமாய் நிறைந்துள்ளன; வேதாந்த பரமாய்க் காண்போர்க்கு, ஆன்மஞான அனுபவத்தையும், பக்தி பூர்வமாய்க் கரைந்து உருகுவார்க்கு ஆன்ம இன்பத்தையும் வாரி வாரி வழங்குவது இந்நூல்.

கண்ணுக்குக் கண்ணாய்க் கண்இன்றிக் காண்உனைக்
காணுவது எவர்பார் அருணாசலா

அருணாசல அக்ஷரமணமாலை 15

